SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16 - 31 மே 2026 ₹25
Volume : 46 Issue : 23
www.samarasam.net

**ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள்**
- ஓர் அலசல்

**தேர்தல் முடிவுகளும் புதிய சவால்களும்**



# ஹஜ்
## சடங்குகளின் அர்த்தங்களும் ஆன்மிக அனுபவங்களும்




- தமிழகத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி இடைநிற்றல் – ஓர் ஆய்வு
- கல்வி – சவால்களும் சாதனைகளும்..!
- மொழிப் பாடங்களில் இவ்வளவு வாய்ப்புகளா?
- ஆழ் தொழில்நுட்பத்தில்(Deep Tech) புதுத் தொழில்(Startup) தொடங்க என்ன படிக்க வேண்டும்?

# ADMISSION NOTICE

## THASSIM BEEVI ABDUL KADER COLLEGE FOR WOMEN

A Minority Institution Sponsored by Seethakathi Trust, Chennai
Recognized by DBT under Star College Scheme, Ministry of Science and Technology, Govt. of India.
An Autonomous Institution Affiliated to Alagappa University, Karaikudi.
Accredited by NAAC with "A" Grade [CGPA:3.16] & ISO 9001:2015 Certified Institution.
Recognized by UGC under 2(f) & 12 (B). Kilakarai – 623517, Ramanathapuram District
**Phone :** 04567 - 241934 / 241933 **E-mail :** principal@thassim.ac.in



Dr. B.S.Abdur Rahman
Founder

## UG PROGRAMMES (3 Years-Regular)

Part-I Language options for four semesters
Tamil, Arabic & Hindi

### ARTS, COMMERCE & MANAGEMENT

- B A Afzal-Ul-Ulamah
- B A English
- B Com
- B Com with Computer Applications
- B Com Professional Accounting
- B B A

### LIFE SCIENCE, FOOD SCIENCE, COMPUTATIONAL SCIENCE AND SOCIAL SCIENCE

- B Sc Nutrition and Dietetics
- B Sc Costume and Fashion Design
- B Sc Information Technology
- B Sc Computer Science
- B Sc IT and Cyber Security
- B C A
- B Sc Artificial Intelligence & Data Science
- B Sc Mathematics
- B Sc Chemistry
- B Sc Microbiology
- B Sc Biotechnology
- B Sc Psychology

## PG PROGRAMMES (2 Years-Regular)

- M A English
- M Com
- M Sc Nutrition and Dietetics
- M Sc Costume and Fashion Design
- M Sc Information Technology
- M C A (2 Years) AICTE Approved
- M Sc Mathematics
- M Sc Chemistry
- M Sc Microbiology
- M Sc Psychology

## RESEARCH PROGRAMMES

**Ph D (Full Time / Part Time)**

- Ph D in Commerce
- Ph D in Computer Science
- Ph D in Home Science
- Ph D in Chemistry

Admission Centre @ Ramnad
Opp. to SMS Super Market, Near Apollo Pharmacy, Bharathi Nagar
Contact: 9342454632

**Collaborative Diploma & Advance Diploma Special Education Programmes**
(One Year Programme) ✦ UG Degree / UG Degree with B.Ed can apply

Hands-on laboratories Training, Field visits, Industrial exposure for science students under DBT Star College scheme

Open source Geospatial Knowledge Centre for the Ramnathapuram district in collaboration with IIT Bombay

Monthly Stipend for meritorious Research Scholars

Research Collaboration with Industries / Universities

Diploma in Muballiga for All Muslim Students in collaboration with UNIS Academy

Full time Muallama and Muballiga for Hostel Muslim students

Well-furnished Hostel, Free Wifi, Nutritious Food, Fitness Centre, Indoor & Outdoor Games Facilities

Well Equipped Central Library and E-Library

College Bus Facilities

Transforming budding Graduates into Campus Startups and Women Entrepreneurs through TBIIC

Japanese Language Learning Centre

Rs.1000/- concession for the pre-Registration seats from 20th April 2026 to 8th May 2026.

### CONCESSION ON TUITION FEE FOR SPORTS PLAYERS

| Participation in International | Participation in National | Participation in State Level | Winner in District Level |
|---|---|---|---|
| 100% | 75% | 50% | 25% |

Recognised by State and Central Government Sports Development Authority

### CONCESSION ON TUITION FEE FOR MERITORIOUS STUDENTS

| PG PROGRAMME | Percentage in UG | 90% above | 85 - 89% | 80 - 84% | 75 - 79% |
|---|---|---|---|---|---|
| | Concession | 100% | 75% | 50% | 25% |

Fees Concession for State, District and Regional Level Toppers

**CONCESSION ON TUITION FEE FOR ALUMNAE STUDENTS (25% for All PG Programmes)** **Free Hostel for PG & Ph.D Students**

**Rs.2000/- concession for the students from the sister institutions at the time of admission.**

| Mr Arif Buhary Rahman | Alhaj Khalid A K Buhari | Dr Rahmathunisa Abdur Rahman | Dr S Sumaya |
|---|---|---|---|
| Chairman | Secretary | Correspondent | Principal |

93424 54601, 93424 54632
94426 17038, 94426 17021

: admissionstbakc@thassim.ac.in

Admission through website :
**www.thassim.ac.in**




## உள்ளே...

7 **தலையங்கம்**
தேர்தல் முடிவுகளும் புதிய சவால்களும்

8 **முனைவர் நஹாஸ் மாலா**
ஹஜ்: சடங்குகளின் அர்த்தங்களும் ஆன்மிக அனுபவங்களும்

16 **சேயன் இப்ராகிம்**
ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் - ஓர் அலசல்

24 **நஸ்ரத் ரோஸி**
மொழிப் பாடங்களில் இவ்வளவு வாய்ப்புகளா?

30 **A.R. கமருன்னிசா ஜாஃபர் அலீ**
இப்ராஹீம்(அலை) அவர்களின் அழகிய அணுகுமுறை

34 **கப்ளிசேட்**
கல்வி: சவால்களும் சாதனைகளும்..!

40 **ஷா.காதர் கனி**
தமிழகத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி இடைநிற்றல் - ஓர் ஆய்வு

44 **வாஜித் ஷா**
ஆழ் தொழில்நுட்பத்தில்(Deep Tech) புதுத் தொழில்(Startup) தொடங்க என்ன படிக்க வேண்டும்?

46 **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**
உங்களுக்கான வேத நூல் இது!

50 **அமீரா முர்ஷிதா**
இன்னும் ஒரு ரியல் ஹீரோ

அக்கரைப் பச்சை தொடர், சிறார் உலகம் அடுத்த இதழில் இடம் பெறும்.

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

### தேர்தல் வழிகாட்டும் இதழ்

தேர்தல் சிறப்பிதழின் தலையங்கம், தேர்தல் அரசியல், சிறப்பான ஆட்சியும் குடிமக்களின் பொறுப்பும், விஜய் அரசியல் யாருக்குப் பயன்?, நம் வாக்கு நம் உரிமை, தேர்தல் களம் - ஒரு பார்வை ஆகிய கட்டுரைகள் மிகச் சிறப்பாக உள்ளன. இவற்றைப் படித்து விட்டு ஒவ்வொருவரும் யார் வரக் கூடாது என்பதை விளங்கி வாக்களிப்பது திண்ணம். அரசியலற்ற ஒரு கூட்டத்தால் லாப மடையப் போவது பாஜகவே எனும் கூற்று அட்சர லட்சம் பெறும். தமிழ்நாட்டு எதிர்கால ஆபத்தைச் சுட்டிக் காட்டி விட்டீர்கள்!

சகோதரச் சமுதாயச் சொந்தங்களுக்கும் புரியும் வண்ணம் இஸ்லாம் சாதியைப் பார்க்காமல் நீதியின் பக்கம் நிற்கிறது என்ற வி.எஸ்.முஹம்மத் அமீனின் மேடைப் பேச்சு சிறந்த உரை.

– S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன் சத்திரம்

### ஜனநாயகக் கம்பீரம்

இந்திய முத்தம் சிறுகதை(யில்)யை படி (பயணி)த்தேன். எளிய எழுத்து நடை தெளிந்த நீரோட்டமாக எழுத்துப் பிரவாகம். எல்லா வற்றுக்கும் மேலாக இந்தியாவில் ஏகப்பட்ட உட்பூசல் இருந்தாலும் ஜனநாயக நாடு எனும் கம்பீரம் வெளிநாடு சென்று திரும்பும் தோழர்களின் உள்ளக் கிடக்கையை வி.எஸ். முஹம்மத் அமீன் சிறப்பாக எடுத்தாண்டு உள்ளார். அடுத்த சிறுகதையை எதிர்பார்க்கின்றேன்.

– சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

### வாழ்வையும் அரசியலையும் பேசும் சிறுகதை

வி.எஸ்.முஹம்மத் அமீன் எழுதிய இந்திய முத்தம் சிறுகதை மிகச்சிறப்பு. அச் சிறுகதை வாழ்வைப் பேசுகிறது. அரசியல் தத்துவம் பேசுகிறது. நெகிழ வைக்கிறது. தேர்தல் இல்லாத நாடுகளில் எவ்வாறு தேர்தலையும் ஓட்டையும் மதிக்கிறார்கள் என்பதை நெகிழ்வுடன் விளக்குகிறது.

– டாக்டர் கலீலுர் ரஹ்மான், சென்னை



### சரியான நேரத்தில் சரியான கதை

‘அரசியலற்ற இளைஞர்களை உருவாக்கி வரும் விஜயின் அரசியல் யாருக்குப் பயன்?’ கட்டுரை பிரமாதம். நம் இளைஞர்களுக்கு நாம் இன்னும் விவரமாகச் சொல்ல வேண்டிய கருத்துகள் அடங்கிய கட்டுரை. தமிழ்நாட்டை நீண்ட காலம் ஆண்ட கட்சி மீண்டும் வர இயலாமல் போனதும், வடக்கத்தி மக்களை அறியாமை இருளுக்குள் அழுத்திப் பிடித்து வைத்து ஏமாற்றி அரசாண்டு வரும் ஒரு கட்சி தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாமல் இருப்பதும், ஏதோ தானாக நிகழ்ந்தது அல்ல, நண்பர் குறிப்பிட்டதுபோல நீண்ட காலத் தொடர் செயல்பாடுகள். நம் இளைஞர்கள் இதனை அறிய வேண்டும். ஜனநாயகத்தின் அருமையைக் கூறும் இந்திய முத்தம் சிறுகதை மிகச் சிறப்பு. இதுவும் நம் இளைஞர்களுக்குத் தேவையான செய்தி.

– முனைவர் ச.அய்யம்பிள்ளை, திருச்சி

### நெகிழ வைத்த சிறுகதை

சமரசம் இதழில் வெளியான இந்திய முத்தம் சிறுகதையை நம்ம வாசல் யூடியூப் பக்கத்தில் கேட்டேன். துப்பறியும் கதையை வாசிக்கும் போது ஏற்படும் ஆவலைப் போன்று அடுத்து என்ன என்ற எதிர்பார்ப்பைத் தூண்டிய அருமையான கதை. இந்திய அரசியல் சட்டம் வழங்கிய ஜனநாயக உரிமையான வாக்குரிமை குறித்த சவூதியின் ஷெய்க் கொண்டிருந்த பெரும் மதிப்பை முத்தமிட்டு வெளிப்படுத்திய காட்சி நெகிழ வைத்தது.

– ஆனந்தன், சூளைமேடு, சென்னை

### சிறப்பான பார்வை

இஸ்லாமிய ஆட்சியின் அடித்தளமே மக்களுக்குச் சேவை செய்வதுதான். ஆட்சி என்பது பதவி அல்ல, பொறுப்பு. ஆட்சி

குறித்தும் இறைவனிடம் ஆட்சியாளர்கள் கணக்குக் காட்ட வேண்டும்.

ஆட்சியாளர்களும், குடிமக்களும் தமது கடமைகளை உணர வேண்டும் என்ற நஜ்முத்தீன் அவர்களின் கருத்து உண்மையானது. ஐந்தாண்டு கால திமுக ஆட்சி குறித்த சேயன் இப்ராகிமின் பார்வை சிறப்பு. தேர்தல் சிறப்பிதழின் தலையங்கம் சிறப்பான வழிகாட்டுதல்.

– S. அஜித்தா, M. லைலாம்மா, S. மகுதனன், தேனி

### நினைவுகளை மீட்ட சிறுகதை

இந்திய முத்தம் சிறுகதை மிகவும் அருமை. 30 ஆண்டுகள் சவூதி அரேபியாவின் தமாமில் இருந்த நினைவுகளைப் பசுமையாக்கியது. 'ஊருக்கு வருகிறேன்' என்று சொன்னதும் இரண்டு ஆண்டுகள் ஆகவில்லையே என்று அப்பா கேட்கும் கேள்வி என் மாமனாரை நினைவூட்டியது. கஃபீலின் திடீர் முடிவும், அதற்கு நம்மவர்கள் அவரைத் திட்டுவதும் தத்ரூபமாக அப்படியே இருந்தது. பயணத்தில் மாற்றம் எவ்வளவு சிக்கல் என்பதையும் கதை சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. மிக முக்கியமாக சவூதிகள் மனதில் ஜனநாயக ஆட்சி முறை இல்லை என்ற ஏக்கம் இருப்பதை மிகவும் உருக்கமாகப் பதிவு செய்துள்ளது.

– முபாரக் பானு, (மின்னஞ்சல்)

### நாட்டு வளர்ச்சிக்கு அபிமானம் உதவாது

மக்களிடம் வேறுபாடு காட்டும் தவறானவர்களிடம் ஆட்சி அதிகாரம் சென்றுவிடக் கூடாது. அன்பால் அரவணைப்பவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நடிகர் மீதான அபிமானம் நாட்டு வளர்ச்சிக்கு உதவாது.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

### நீதியின் பக்கம் நிற்பதே அறம்

தேர்தல் சிறப்பிதழ் அருமை. அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளை மிகச் சரியாக விமர்சித்துள்ளீர்கள். நல்லவராக இருந்தாலும் சுயேட்சையாக நின்றால் ஒருவர் வெல்லப் போவது இல்லை. கட்சி சார்ந்தவர்களே வெற்றி பெறுகிறார்கள். மேடை பகுதியில் முஹம்மத் அமீனின் உரை சிறப்பு. சாதியின் பக்கம் நிற்காமல் நீதியின் பக்கம் நிற்பதுதான் இறைவனுக்குச் செய்யும் தொண்டு. இந்திய முத்தம் சிறுகதை சிந்திக்க வைக்கும் அழகிய கதை.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

### சரியான வழிகாட்டுதல்

நம் குரல்வளையை அழுத்தும் இரும்புக் கைகளாக மனம் இருக்கக் கூடாது. நிறைவான வாழ்வு குறையைத் தேடாது. நல்லாட்சி குறித்த நபிகள் நாயகத்தின் வழிகாட்டுதல்களை எடுத்துரைத்த நஜ்முத்தீன் கட்டுரை நன்று. வாக்காளர்களுக்கான சரியான வழிகாட்டுதல்களைத் தலையங்கம் வழங்கியுள்ளது. வெற்றுப் பேச்சு குறித்த நபிமொழி சிந்திக்கக் கூடியது.

– ப.குருசாமி, தேனி

### புரட்சிகரமான கரு, அசாத்திய துணிச்சல்

இந்திய முத்தம் இந்திய இதயங்களை சிலிர்க்கச் செய்கின்ற உன்னதமான சிறுகதை. புரட்சிகரமான கருவை நேர்த்தியாக மட்டுமில்லாமல் அசாத்தியத் துணிச்சலோடும் வி.எஸ்.முஹம்மத் அமீன் கையாண்டிருக்கின்றார். கச்சிதமாய் தேர்தல் காலத்தில் இச்சிறுகதையை மறுபிரசுரம் செய்திருப்பது மிகவும் சிறப்பு.

– ஏ.ஏ.ஹெச்.கே. கோரி, சென்னை

**வாசகர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் அனைவருக்கும் ஏகத்துவத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துகள்!**

சமரசம் குழுமம்


SINCE 1985
ROBAGO®
BAGS THAT CARRY DREAMS
SPECIAL 10% OFF
FOR STUDENTS
ALL IN ONE PLACE
SCHOOL, COLLEGE, EXECUTIVE, TREKKING, SLING & DUFFLE BAGS
TRUSTED BY LEADING CORPORATES FOR PREMIUM BAG SOLUTIONS
SCAN HERE
THIS OFFERIS VALID TILL
MAY 31ST 2026
USE THE CODE
SM10
ROBAGO
WELCOMING A NEW TERM WITH BRIGHT OPPORTUNITIES!

சரம் : 46
மலர் : 23

وَقُولُواْقَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 துல்கஃதா 28-துல்ஹஜ் 13 • 2026 மே 16-31

# தேர்தல் முடிவுகளும் புதிய சவால்களும்

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, அஸ்ஸாம், மேற்கு வங்காளம் ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகளில் கேரளா தவிர மற்ற மாநில முடிவுகள் மிகப் பெரும் அதிர்வையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. பாஜகவை எதிர்த்து அரசியல் செய்பவர்களுக்கான நிலை என்ன என்பதை இத்தேர்தல் முடிவுகள் மூலம் பாஜக சொல்லாமல் சொல்லியுள்ளது.

மக்கள் தீர்ப்பை ஏற்றுக் கொண்டாலும் SIR நடைமுறைகள், வாக்கு எண்ணிக்கை, தேர்தல் ஆணையத்தின் வழியாக பாஜகவின் ஆதிக்கம், மின்னணு வாக்குப் பதிவுகள் எனப் பெரும் ஐயங்களுக்கும் இத்தேர்தல் முடிவுகள் வழிவகுத்தன. தேர்தலுக்குப் பிந்தைய மேற்குவங்கத்தில் ஏற்பட்ட கலவரமும், தமிழ்நாட்டில் ஆளுநர் தலையீட்டால் ஏற்பட்ட குழப்பங்களும் பாஜகவின் கொடும்பிடியை இன்னும் உரத்துச் சொல்கிறது.

மாநில சுயாட்சிக்காகத் துணிந்து நின்று ஒன்றிய பாஜகவை எதிர்த்து ஆளுநர் ரவியின் மூலம் ஏற்படவிருந்த சூழ்ச்சிகளை முறியடித்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வீழ்த்தப்பட்டிருக்கின்றார். நடிகர் விஜயின் நாயகக் கவர்ச்சியும், தொடர்ந்து திமுகவுக்கு எதிராக வைக்கப்பட்ட பரப்புரைகளும் திமுகவை வீழ்த்தும் பாஜகவின் திட்டத்திற்குப் பெருமளவு கை கொடுத்திருக்கின்றது.

முதலமைச்சர், 14 அமைச்சர்கள், SDPI உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பலர் வெற்றி வாய்ப்பை இழந்தாலும் திமுக எதிர்க்கட்சி நிலையை அடைந்திருப்பதும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இரு இடங்களிலும் மஜக, மமக தலா ஓர் இடத்தில் வெற்றி பெற்றிருப்பதும், பாஜக ஓர் இடம் தவிர அனைத்து இடங்களிலும் வீழ்த்தப்பட்டிருப்பதும், பாஜகவுடன் கூட்டணி வைத்த அதிமுக பெரும் பின்னடைவைச் சந்தித்திருப்பதும் ஆறுதல் தரும் செய்திகள். ஆயினும் இந்தத் தேர்தல் பின்னடைவை திமுக சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

நாயக பிம்பத்தை நம்பியே மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். நாயக முகம், குழந்தைகளின் விருப்பம் என்பவை நாடாளும் தகுதிக்கான அளவுகோலானது தமிழ்நாட்டு அரசியல் முதிர்ச்சியின் பெரும் தோல்வியாகவே பார்க்க முடிகிறது. மாநில சுயாட்சியைப் பறித்து கொல்லைப்புற அரசியல் செய்யும் பாஜகவின் பெரும் திட்டம் தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள நெருக்கடியான சூழலில் இந்தத் தேர்தல் முடிவுகள் தமிழ்நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை பலம் யாருக்கும் இல்லாத சூழலில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்ற தவெகவை ஆளுநர் ஆட்சி அமைக்க அழைத்திருக்க வேண்டும். பெரும்பான்மையை ஒரு வார கால அவகாசத்தில் சட்டமன்றத்தில் தவெக நிரூபிக்கத் தவறினால் அடுத்தகட்ட நகர்வை நோக்கி நகரலாம். ஆட்சிக்கு வருவதற்கு முன்பே பாஜகவின் நெருக்கடிகள் தொடங்கிவிட்ட சூழலில் தனிப்பெரும்பான்மையின்றி ஆட்சி அமைக்கும் தவெக மிகப்பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எந்தச் சூழலிலும் ஒன்றிய அரசின் அழுத்தங்களுக்கு அடிபணிந்துவிடாமல் தமிழ்நாட்டு நலனிலும் வளர்ச்சியிலும் முழுக்கவனம் செலுத்த வேண்டும். ஊழலற்ற ஆட்சி, போதையற்ற ஆட்சி என்ற முழுக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டும். டாஸ்மாக் உள்ளிட்ட மது, போதைக்கு முற்றிலும் தடைவிதிக்கும் அறிவிப்பை முதல் கையொப்பமிட்டு வெளிப்படுத்த வேண்டும். தவெக சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தலுக்கு முன்பு கொடுத்த உத்தரவாதத்தை உறுதிப்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

தவெகவின் மொழியில் சொல்லவேண்டுமெனில் கொள்கை எதிரியான பாஜகவை விஜய் துணிவுடன் எதிர்த்துக் களமாட வேண்டும்.

# ஹஜ்

## சடங்குகளின் அர்த்தங்களும் ஆன்மிக அனுபவங்களும்

- முனைவர் **நஹாஸ் மாலா**

மலையாளத்திலிருந்து தமிழில் : மௌலவி M.M. **முஹம்மத் இஸ்மாயீல்** இம்தாதி



**அரேபியப் பாலைவனத்தின் சுட்டெரிக்கும் பகல்களுக்கும் மர்மமான இரவுகளுக்கும் சாட்சியாக புனித கஅபா கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நபி இப்ராஹீம்(அலை), அவரது மகன் இஸ்மாயீல்(அலை) ஆகியோரால் கட்டப்பட்ட இந்தச் சதுர வடிவக் கட்டிடத்தைச் சுற்றிலும் காலம் அதன் நிழல்களை வாசித்துக் கொண்டிருந்தது.**

மனித வரலாற்றையே மாற்றியமைத்த பிரார்த்தனைகள், புரிதல்கள், பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஒரு பரந்த சமுத்திரம் அந்தப் பாலைவனத்தின் மணல் துகள்களுக்குள் மறைந்து கிடக்கிறது.

சத்தியத்துக்குச் சான்று வழங்கிய குழந்தைப்பருவமும், அக்னிப் பரீட்சையும், சிலை வழிபாடும் ஒழுக்கக்கேடும் தலைவிரித்து ஆடிய ஒரு காலத்தில் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய தந்தை ஆஸர் சிலைகளைச் செய்பவராக இருந்த போதிலும் ஞானியான இப்ராஹீம்(அலை) அவர்கள் தமது இளமைப் பருவத்திலேயே ஒரே இறைவனை உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் சந்திரனையும், சூரியனையும், நட்சத்திரங்களையும் பார்த்தபடி, ‘உதிப்பதும் மறைவதும் கடவுள்கள் அல்ல’ (திருக்குர்ஆன் 6:76) என்று அறிவித்தார்கள்.

‘என் தந்தையே கேட்கவும் பார்க்கவும் முடியாத, உங்களுக்கு எந்தப் பயனையும் அளிக்காத ஒன்றை நீங்கள் ஏன் வணங்குகிறீர்கள்?’ (திருக்குர்ஆன் 19:42) எனும் இந்தக் கேள்விதான் வரலாற்றின் மாபெரும் புரட்சியாக அமைந்தது.

இதற்காக அவர்கள் தன் சொந்த மக்களால் நிராகரிக்கப்பட்டதுடன் ஒரு பெரிய நெருப்புக் குழியில் வீசப்பட்டார்கள். இருப்பினும் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்திருந்த இப்ராஹீம் நபிக்காக நெருப்புக்கு அல்லாஹ் இவ்வாறு கட்டளையிட்டான்: 'நெருப்பே, இப்ராஹீமுக்குக் குளிர்ச்சியையும் அமைதியையும் அளிப்பதாக மாறிவிடு!' (திருக்குர்ஆன் 21:69)

நபி இப்ராஹீம்(அலை) அவர்களுக்கு ஹாஜிரா என்ற மனைவியின் மூலம் இஸ்மாயீல்(அலை) என்ற மகன் பிறந்தார். இப்ராஹீம்(அலை) அவர்கள் குழந்தையையும் தன் மனைவியையும் மக்காவின் ஆள் நடமாட்டமில்லாத மணல் குன்றுகளில் விட்டுச் சென்றபோது அன்னை ஹாஜிரா அவர்கள், 'இதைச் செய்யும்படி அல்லாஹ்தான் உங்களுக்குக் கட்டளையிட்டானா?' என்று கேட்டார். அவர்கள் 'ஆம்' என்று பதிலளித்தபோது, அன்னை ஹாஜிரா அவர்களின் பதில் இன்றும் உலகை வியப்பில் ஆழ்த்துகிறது. 'அப்படியானால், அல்லாஹ் எங்களை ஒருபோதும் கைவிட மாட்டான் (இஃதன் லா யுழய்யினல்லாஹ்)' அந்த உணர்தலே பிற்காலத்தில் உலகத்துக்கான 'ஸம்ஸம்' எனும் புண்ணிய நீருக்குக் காரணமாக அமைந்தது.



ஸஃபா மர்வா


ஹஜ்


இஹ்ராம்

## ஒரு தாயின் போராட்டம்

ஸஃபா, மர்வா மலைகளுக்கு இடையே ஒரு தாய் ஓடியது தாகத்தால் தவிக்கும் தன் குழந்தைக்கு ஒரு துளி தண்ணீர் கிடைக்குமா எனும் தேடலுக்கான ஓட்டம் மட்டுமல்ல; அது அல்லாஹ்வின் மீதான நன்னம்பிக்கையின் எதிர்பார்ப்புக்கு ஓர் அடையாளமுமாகும்.

இந்த ஓட்டத்தைத்தான் உலக முடிவு வரையிலான புனிதப் பயணிகளுக்கு அல்லாஹ் கட்டாயக் கடமையாக மாற்றி விட்டான். எந்த ஒரு நெருக்கடியான சூழலிலும் தனக்கு அஞ்சுகிறவர்களுக்கு அல்லாஹ் எதிர்பாராத இடத்திலிருந்து ஒரு வழியைத் திறப்பான் என்பதற்கு அன்னை ஹாஜிரா ஒரு மிகச் சிறந்த உதாரணமாவார். இது தக்வா எனும் இறையச்சத்தின் விளைவாகும்.

தமது மகன் வளர்ந்து பெரியவனாகிய சந்தர்ப்பத்தில் அவரைப் பலியிடுமாறு கனவின் மூலமாக இறைக் கட்டளை கிடைத்தபோது நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் சற்றும் தயங்கவில்லை. தமது அன்பு மகனின் கழுத்தில் கத்தியை வைக்கத் துணிந்த அந்தத் தருணம் இருக்கிறதே அது தந்தை பாசத்தை விட மேலான இறைப் பாசத்தின் அடையாளமாக விளங்கியது. அல்லாஹ் அந்த மாபெரும் தியாகத்தை ஏற்றுக் கொண்டும் விட்டான்.

பின்னர் தந்தையும் மகனும் சேர்ந்து கஅபாவைக் கட்டினார்கள். அது கட்டி முடிக்கப்பட்டதும் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் (இறைவனின் கட்டளைக்கு இணங்க) உலகை நோக்கி,'மக்களே, ஹஜ்ஜுக்கு வாருங்கள்!' என்று அழைப்பு விடுத்தார்கள். அந்த அழைப்பு மலைகளையும் கடல்களையும் கடந்து ஒவ்வொரு விசுவாசியின் இதயத்திலும் பதிந்தது.

## அறியாமைக்கால ஹஜ்ஜும் இஸ்லாமிய ஹஜ்ஜும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவைக் கைப்பற்றுவதற்கு முன்பே கஅபாவில் ஹஜ் எனும் வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்தது. இருப்பினும் அது நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் முன்வைத்த ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அது ஏகத்துவத்திலிருந்து விலகிய ஒன்றாகவே இருந்தது. அறியாமைக் காலத்தில் கஅபாவைச் சுற்றி சுமார் 360 சிலைகள் இருந்தன.

ஒவ்வொரு குலத்தினரும் தங்கள் சிலைகளை வணங்கிக் கொண்டிருந்ததுடன் அவற்றுக்குப் பலிகளையும் செய்து வந்திருந்தனர். இஸ்லாமிய ஹஜ்ஜில் இவை அனைத்தையும் அகற்றி, ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ எனும் ‘ஒரே இறைவன்’ என்ற ஏகத்துவக் கருத்தோட்டத்தின் பக்கமாக உலகத்தினருக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது.

அறியாமைக் காலத்தில் ஹஜ் என்பது கோத்திரப் பெருமிதம், கவிதை, மது அருந்துதல் ஆகியவற்றின் கொண்டாட்டமாக இருந்தது. அவர்களுக்கிடையில் கஅபாவை நிர்வாணமாகச் சுற்றி வரும் வழக்கம் கூட இருந்து வந்தது. எனினும் இஸ்லாம் ஹஜ்ஜை ஒரு ஆன்மிகப் பயிற்சியாக மாற்றியது. எளிமையான இஹ்ராம் ஆடைகளை அணிந்து கொண்டு அல்லாஹ்வைப் பணிவுடன் நினைவு கூரும் ஒரு பயிற்சியாக அது மாறியது.


தவாஃப்


ஸஈ

## இஹ்ராம் – உலகப் பற்றின் பல வண்ணப் பகட்டைக் களைதல்

இஹ்ராம் என்பது ஹஜ் எனும் ஆன்மிகப் புரட்சியின் மிக முக்கியமானதும் முதலாவதுமான படியாகும். அது வெறுமனே உடலைச் சுற்றி இரண்டு வெள்ளைத் துணிகளைக் கட்டிக்கொள்ளும் ஒரு சடங்கு மட்டுமல்ல; மாறாக அது ஒரு நபர் தனது சமூக அந்தஸ்து, செல்வப் பெருமை, குலப் பெருமிதம் ஆகியவற்றையெல்லாம் முற்றிலுமாகக் களைந்து விட்டு தனது படைப்பாளனுக்கு முன் தன்னை ஒரு சாதாரண அடிமையாக இருப்பதன் அடையாளமாகும்.

அனைத்து ஆபரணங்கள், வண்ணமயமான ஆடைகள் அனைத்தையும் துறப்பதன் மூலம் அவர் பிறந்தபோது தனக்கிருந்த களங்கமற்ற தன்மைக்கும், மரணத்திற்குப் பிறகு உடலுக்கு அணிவிக்கப்படுகின்ற கஃபன் ஆடையின் எளிமையின் பக்கமும் மனிதன் உணர்வுப்பூர்வமாகத் திரும்புகின்றார்.

அரசனும் குடிமகனும், அறிஞரும் பாமரரும், கோடீஸ்வரரும் ஏழையும் இஹ்ராம் எனும் ஒரே உடையில் அணிவகுத்து நிற்கும் போது அனைத்து உலகியல் வேறுபாடுகளும் கரைந்து காணாமல் போய் விடுகின்றன. இறைவனின் பாதையில் ‘நான்’ எனும் அகந்தையை பலி கொடுத்து விட்டு, லப்பைக்(இதோ நான் உனது அழைப்புக்குப் பதிலளித்து விட்டேன்) என்ற மந்திரத்துடன் இறைநம்பிக்கையாளர்கள், தங்கள் பயணத்தைத் தொடங்கும் போது ஆன்மா அதன் உண்மையான உரிமையாளனின் பக்கமாகத் திரும்புகின்ற புனிதப் பயணமாக மாறுகிறது.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிர்களிடமும் அமைதியுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும் எனும் உன்னதமான பாடத்தை வழங்கும் இஹ்ராம் நம்பிக்கையாளரை ஒரு புதிய மனிதனாக மாற்றும் முதல் ஆன்மிகப் பாடசாலையாகும்.

## தவாஃப் – ஆன்மாவின் காந்த மையம்

புனித கஅபாவை மையமாகக் கொண்டு ஏழு முறை மேற்கொள்ளப்படுகின்ற வலம் வருதல் அல்லது தவாஃப் செய்தல் என்பது, பிரபஞ்சத்தின் இயக்கத்தையும் ஓரிறையின் மீதான நம்பிக்கையின் உறுதியையும் ஒருங்கே பிரதிபலிக்கிறது.

மிகச்சிறிய அணுக்கள் முதல் மிகப்பெரிய கோள்கள் வரை இந்தப் பிரபஞ்சம் ஒரு நிலையான மையத்தைச் சுற்றி வருவதைப் போலவே ஓர் இறைநம்பிக்கையாளனின் வாழ்க்கையும் அல்லாஹ் என்னும் ஒரே ஆன்மிக மையத்தைச் சுற்றியே சுழல வேண்டும் எனும் மகத்தானதொரு உண்மையை இது கற்றுத் தருகின்றது.

இதயத்தை கஅபாவின் சுவர்களில் இணைத்துக் கொண்டபடி செய்யப்படுகின்ற

ஒவ்வொரு வலம் சுற்றுதலும், தனது வாழ்க்கையின் அனைத்துச் செயல்களையும் எண்ணங்களையும் இறைதிருப்தி என்ற ஒரே குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதற்கான ஓர் உறுதியான சபதமாகும்.

பூமியில் முதல் வழிபாட்டுத் தலம் எனும் நிலையில் கஅபா முஸ்லிம் உம்மத்தின் ஆன்மிக அச்சாணியாகத்(Spritual Axis) திகழ்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் ஒரே திசையில், ஒரே ஸ்வரத்தில், ஒரே குறிக்கோளுடன் சுற்றும்போது, தனிப்பட்ட நலன்கள் மறைந்து, 'உம்மத்' எனப்படும் மாபெரும் சமுத்திரத்தின் ஓர் அங்கமாக நான் மாறிக் கொண்டிருக்கின்றேன்' எனும் உணர்வு ஒவ்வொரு ஹாஜிக்குள்ளும் உதயமாகிறது.

பௌதிக உலகின் இரைச்சல்கள் அனைத்திலிருந்தும் விலகி படைத்தவனின் கருணையை நாடி மேற்கொள்ளப்படும் ஆன்மாவின் இந்த உணர்ச்சிமயமான பயணம் மனிதனை இறைவனுக்கு மிகவும் நெருக்கமாகக் கொண்டு வருகிறது.



மினா



அரஃபா

### 'ஸஈ'யும் ஸம்ஸமும்

ஸஃபா - மர்வா மலைகளுக்கு இடையேயான இந்த 'ஸஈ' எனும் ஓட்டம், அன்னை ஹாஜிரா அவர்களின் ஈடு இணையற்ற தியாகத்தையும் உயிர் வாழ்வதற்கான போராட்டத்தையும் மீண்டும் மறுகட்டமைப்பு செய்து கொள்வதாகும்.

தன் சிறு குழந்தைக்கு ஒரு துளி நீரை தேடியவாறு மணல் குன்றுகளின் வழியே ஓடிய அந்தத் தாயின் ஓட்டம் எல்லா வழிகளும் அடைபட்டு விட்டதாகத் தோன்றும் போதும் மனம் தளராமல் போராட வேண்டும் என்றும், அல்லாஹ்வின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும்(ஹுஸ்னுழ் ழன்னு) நல்லெண்ணமும் கொள்ள வேண்டும் என்றும் நமக்குக் கற்றுத் தருகிறது.

உதவி செய்வதற்கு யாருமே இல்லாத மணற்காட்டில் மிகவும் நம்பிக்கையற்ற தருணங்களில்கூட கைவிடக் கூடாத இறைவனின் கருணையைத்தான் இது குறிக்கிறது. உடல் உழைப்பும்(தத்பீர்) ஆன்மிகமான பரம் சாட்டுதலும்(தவக்குல்) ஒன்று சேரும் போது தான் வாழ்வில் அற்புதங்கள் நிகழ்கின்றன என்ற ஒரு பெரும் பாடத்தை இந்த ஓட்டம் நமக்குக் கற்றுத் தருகிறது.

### மினா – பிரார்த்தனையின் கூடாரங்கள்

'மினா' எனும் கூடார நகரம் இறைவழியில் அனைத்தையும் தியாகம் செய்வதற்குத் தயாராகும் இறை நம்பிக்கையாளர்களுக்கான ஒரு ஆன்மிக முகாமாகும். நவீன உலகின் ஆடம்பரங்கள், கான்கிரீட் வசதிகளை விட்டு தற்காலிகமாக விலகி, அவர்கள் ஒரு வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மட்டும் இலட்சக்கணக்கான மக்கள் ஒரே நிலத்தில் இரவில் உறங்கும் போது அது மனித இயல்பான கர்வத்தையும் சுகபோக நாட்டத்தையும் அழித்து விடுகிறது.

நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் தமது மகனைப் பலியிடுவதற்காகக் கொண்டு சென்ற அந்த வரலாற்றுச்சிறப்பு மிக்க மண்ணில் ஹாஜிகள் ஒன்று கூடும்போது, அது உலகியல் சுகபோகங்களைத் துறந்து, ஓர் இலக்குடன் கூடிய வாழ்க்கை முறையை மேற்கொள்வதற்கான பயிற்சிக் களமாக மாறுகிறது.

மினாவில் உள்ள ஒவ்வொரு கணமும் பிரார்த்தனைக்கும் திக்ர் எனும் இறை நினைவு கூர்தலுக்கும் உரியதாகும்.

இந்தக் கூடாரத் தங்குதலின் மூலம் ஹஜ் பயணி தனது அக உலகைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும், தனது சகோதரர்களிடையே அன்பையும் ஒத்துழைப்பையும் பகிர்ந்து கொள்ளவும் முடிகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த இறை நம்பிக்கையாளர்கள் ஒரே மண்ணில் ஒன்றாக நாள்களைக் கழிக்கும்போது மினாவின் ஒவ்வொரு மணல் துகளும் முஸ்லிம் உம்மத்தின் ஒற்றுமையையும் வலிமையையும் பறைசாற்றுகிறது.

இது காத்திருத்தல் என்பதற்கான ஓர் உருவகமும் கூடத்தான். இறை கருணையின் மாபெரும் வாயில்கள் திறக்கப்படுகின்ற அரஃபாவுக்குள் நுழைவதற்கு முந்தைய ஆன்மிகத் தயாராகுல். அதற்கான காத்திருப்பு.

## அரஃபா – மெய்ஞானத்தின் பள்ளத்தாக்கு

அரஃபாவில் கூடுவதுதான் ஹஜ்ஜின் ஆன்மாவும் மாபெரும் செயலும் ஆகும். மறுமை நாளின் (மஹ்ஷர்) ஒரு சிறு சித்திரத்தை அரஃபா மைதானத்தில் காணலாம். வெண்ணிற ஆடை அணிந்த இலட்சக் கணக்கான மக்கள் தங்களின் அனைத்துப் பதவிகளையும் துறந்து தங்கள் படைப்பாளனுக்கு முன்பு கைகளை உயர்த்தி அந்தத் தரிசு நிலத்தில் நிற்கும் போது, அது மனித வரலாற்றிலேயே மாபெரும் சமத்துவத்தின் காட்சியாக மாறுகிறது. ‘அரஃபா’ என்ற சொல்லுக்கு, ‘அல்லாஹ்வை அறிந்தவர்கள் ஒன்று கூடும் இடம்’ என்று பொருள்.



முஸ்தலிஃபா



ஜம்ரா

பாவங்களை ஒப்புக் கொண்டு, செய்த தவறுகளுக்காக வருந்தி, மனம் திரும்புதலின் கண்ணீர்த் துளிகள் அந்த மண்ணில் விழும் போது அந்தத் தருணத்தில்தான் ஆன்மா அனைத்து அசுத்தங்களையும் களைந்து, புதிதாகப் பிறந்த குழந்தையைப் போலத் தூய்மையடைகிறது.

பிரபஞ்சத்தின் இறைவனுக்கும் படைப்புகளுக்கும் இடையே மிகவும் அந்தரங்கமான உரையாடல் நடைபெறும் இடம் இதுவே. நவீன உலகின் இரைச்சலிலிருந்து விலகி, மௌனத்திலும் பிரார்த்தனையிலும் மூழ்கியிருக்கும் அந்த நேரம், உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் உம்மத்தின் ஒற்றுமையையும் ஆன்மிக உயர்வையும் அது அடையாளப் படுத்துகிறது. ‘அரஃபாவில் ஒன்று கூடல் இல்லாமல் ஹஜ் இல்லை’ என்ற நபியின் கூற்று இந்தச் செயலின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## முஸ்தலிஃபா – சுயபரிசோதனையின் இரவு

அரஃபாவில் மனம் உருகிச் செய்த பிரார்த்தனைகளுக்குப் பிறகு இறைநம்பிக்கையாளர்கள் திறந்த வானத்தின் கீழ் இரவுகளைக் கழிக்கும் இடமான முஸ்தலிஃபா, அக அமைதிக்கும்(ஸகீனத்) சுய ஆய்வுக்கும் (இஹ்திஸாப்) உரிய இடமாகும்.

நட்சத்திரங்களைச் சாட்சியாக்கி மணல், சரளைக் கற்களுக்கு மத்தியில் படுத்திருக்கும்போது மனிதன் தனது குறுகிய நிலையையும் பிரபஞ்சத்தின் பரந்த தன்மையையும் உணர்ந்து கொள்கிறான். புனிதப் பயணிகள் பிரம்மாண்டமானதும் பெருமையும் கொண்ட அரண்மனைகளைத் துறந்து இயற்கையோடு இயற்கையாக இயைந்து படுக்கும் அந்த இரவு, அவர்களுக்கு எளிமையின் மாபெரும் பாடத்தைக் கற்பிக்கிறது.

படைத்தவனின் வானத்தின் கீழ் எந்தப் பொருள் சார்ந்த மறைப்புகளும் இன்றி கழிக்கப்படும் அந்த இரவு ஆன்மாவைப் பணிவுக்கும் அமைதிக்கும் இட்டுச் செல்கிறது. வாழ்வில் வரவிருக்கும் மாபெரும் போராட்டங்களுக்குரிய மனதின் ஏகாந்தமும் ஆன்மிகத் தயாரிப்பும் முஸ்தலிஃபாவின் ஒவ்வொரு கணத்திலும் நிரம்பியிருக்கும்.

### ஜம்ரா – உள்ளிருக்கும் சாத்தானுக்கு எதிரான போராட்டம்

ஜம்ராகளில் மீது கல் எறியும் செயல் நபி இஸ்மாயீல்(அலை) அவர்கள் ஷைத் தானை விரட்டியடித்த வரலாற்று நிகழ்வின் மீள் நிகழ்வாகும். இது ஒரு கல் தூணின் மீது வெறுமனே கல்லெறிவது மட்டுமல்ல, நமக்குள்ளே இருக் கும் தீமைகள், தீய எண்ணங்கள், சுயநலத்திற்கு எதிரான ஒரு நிரந்தரமான போர்ப் பிரகடன மாகும்.

சத்தியத்தின் பாதையில் நடக் கும்போது, ஷைத்தானின் தூண் டுதல்களையும் தவறான வழி காட்டுதல்களையும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நாம் எதிர்கொள்ள வேண்டும் என்ப தையே இது நமக்குக் கற்பிக் கிறது.

> பௌதிக உலகின் இரைச்சல்கள் அனைத் திலிருந்தும் விலகி படைத்தவனின் கருணையை நாடி மேற்கொள்ளப்படும் ஆன்மாவின் இந்த உணர்ச்சிமயமான பயணம் மனிதனை இறைவனுக்கு மிகவும் நெருக்கமாகக் கொண்டு வருகிறது.

எறியப்படும் ஒவ்வொரு கல்லின் மூலமும் இறைநம்பிக்கையாளன் தன் வாழ்க் கையில் தடையாக நின்று கொண்டிருக்கும் தீய சக்திகளை எதிர்த்து நின்று அழிப்பதற்கான ஒரு பெரும் சபதம் எடுக்கிறார். இது தன்னம்பிக்கையின் சின்னமாகும். அது தீமையின் மீதான வெறுப்பை வெளிப் படுத்துவது மட்டுமல்ல, அவற்றுக்கு எதிராக ஒரு வலுவான பாதுகாப்பைக் கட்டியெழுப்பு வதற்கான செய்தியையும் வழங்குகிறது.

மக்கள் திரளுக்கிடையில் நின்றவாறு ஒரு குறிப்பிட்ட இலக்கின் மீது கற்களை எறிவதன் மூலம் ஒவ்வொரு புனிதப் பயணியும் வாழ்க்கையின் நெருக்கடிகளையும் சோதனை களையும் எவ்வாறு விவேகத்துடன் கையாள் வது என்பது குறித்த நடைமுறைப் பயிற்சி யைப் பெறுகிறார்.

### உழ்ஹிய்யா, தஹல்லுல் – அர்ப்பணிப்பும் ஆன்மிகப் புதுப்பித்தலும்

ஹஜ்ஜின் முடிவில் செய்யப்படும் தியாகம், அதாவது ‘உழ்ஹிய்யா’ என்பது அல்லாஹ்வின் பொருட்டு மிகவும் பிரிய மானவற்றைக் கூட தியாகம் செய்யத் தயாராக இருப்பதைக் குறிக்கிறது. இது ஒரு விலங்கை அறுக்கும் சடங்கு அல்ல; மாறாக அல்லாஹ்வுக்குத் தேவை நம் இதயங்களில் இருக்கும் ‘தக்வா’ எனும் இறையச்சமும் ‘இதாஅத்’ எனும் கீழ்ப்படிதலும்தான் என்பதை உணர்வதாகும்.

தன் சொந்த மகனையே தியாகம் செய்யத் துணிந்த இப்ராஹீம்(அலை) அவர்களின் தியாகத்தின் நினைவைப் புதிப் பித்துக் கொள்வதன் மூலம் ஹஜ் பயணி தனது மிருகத்தனமான ஆசைகளையும் சுயநலத் தையும் அறுத்து வைத்து விட்டு அல்லாஹ்வின் மீதான அன்பின் உச்சத்தை அடைய முயல் கிறார்.

பின்னர் முடியை மழித்தல் அல்லது குறைத்துக் கொள்வதன் (தஹல்லுல்) மூலம் ஹாஜி வெளிப்படையான சில நிபந்தனைகளில் இருந்து விடுபடுகிறார். முடி என்பது மனித அழகின் சின்னமாக இருப்பதுடன், அகந்தையின் சின்னமாகவும் விளங்குகிறது. அதை அகற்றுவதன் மூலம், அந்த இறைநம்பிக்கையாளர், தான் அல்லாஹ்வின் பணிவான அடிமை என்பதை உலகிற்குப் பறைசாற்றுகிறார்.

ஹஜ்ஜின் மூலம் பாவத்திலிருந்து விடு பட்ட அந்த இறைநம்பிக்கையாளர் புதிதாகப் பிறந்த குழந்தையைப் போலத் தூய்மை யானவராக ஆகிறார். பெருமை எனும் கவசத்தைக் களைந்து, பணிவு எனும் ஆடையை அணிந்து கொண்ட ஹாஜி புதிய தொரு இலட்சிய உணர்வுடன் ஒரு புதிய மனிதராகத் தனது தாய்நாட்டிற்குத் திரும்பத் தயாராகிறார்.

நன்றி : பிரபோதனம் வார இதழ் - 2026 ஏப்ரல் 24


10 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களே !!
உங்களுக்கு 12 ஆம் வகுப்புடன்
NEET / JEE தேர்வில் வெற்றி பெற
வேண்டுமா...
JNA PUBLIC SCHOOL
(INTEGRATED RESIDENTIAL NEET/JEE PROGRAM
IN AN ISLAMIC ENVIRONMENT)
AN INITIATIVE OF
JAL NEET ACADEMY
CREATING FUTURE MEDICOS
@ TIRUNELVELI
உங்களின் இறுதி இலக்கு NEET/JEE என்றால், தினசரி
பள்ளி அழுத்தத்துடன் போராட வேண்டிய
அவசியமில்லை..!
ஒரு ஆண்டை ஏன் வீணாக்க வேண்டும்,
அதை இழக்காமல் சாதிக்க முடியும்போது?
ADVANTAGES
• Single Focus on NEET/JEE Preparation
• No Clashes between School & Coaching
• Personalized Study Strategies
• Concept Based NCERT Learning
• More Time for Effective Study
• Stress-Free & Disciplined Study
• Reduced Economic Burden & Merit Scholarships
JALAL AHMAD (JAL)
Founder & CEO
மேலும் விபரங்களுக்கு...
8608 19 8608
ADMISSION
CONTINUES...
JAL NEET ACADEMY
NEET REPEATERS 2027
1 YEAR LONGTERM NEET PROGRAM AFTER CLASS 12

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

# ADMISSIONS OPEN

## RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2(f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

### UG COURSES

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

### PG COURSES

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

### RESEARCH COURSE

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

## RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No: 5353A.1/2.20)

### LKG to XII Std

+1 COURSES OFFERED

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

## RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

## RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

### RESEARCH COURSE

- M.Phil., Management
- Ph.D., Management

## RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

## RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

OPENING SOON


*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

63809 80363 / 04374-222123

admissions@rdbcas.edu.in

● **சேயன் இப்ராகிம்**







# ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் – ஓர் அலசல்

**தமிழ்நாடு**

**நடந்து முடிந்துள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் யாரும் எதிர்பாராத விதமாக நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எந்தவிதமான கடின உழைப்பும் இல்லாமல் மிக எளிதான முறையில் அவர் ஈட்டியுள்ள வெற்றி வியப்பளிக்கிறது. ஒரே ஒரு ஆங்கில ஊடகத்தின் கருத்துக் கணிப்பைத் தவிர வேறு எந்த தேசிய, தமிழக ஊடகங்களும் விஜயின் தவெக இந்த அளவில் இடங்களைப் பிடிக்கும் என்று கணிக்கவில்லை. தேர்தல் நிபுணரான பிரனாய் ராய் கூட தவெகவுக்கு எட்டு இடங்கள் மட்டுமே கிடைக்கும் எனக் கணித்திருந்தார். ஒவ்வொரு தொகுதியாகச் சென்று மக்களைச் சந்தித்து கருத்துக் கணிப்பு நடத்திய தமிழக ஊடகங்களான மின்னம் பலம், தந்தி டிவி, சத்யம் டிவி, ஜூனியர் விகடன் ஆகியன கூட தவெகவுக்கு ஐந்துக்கும் குறைவான இடங்களே கிடைக்கும் எனக் கணித்திருந்தன. ஆனால் அனைத்தையும் மீறி தவெக 108 இடங்களைப் பிடித்துள்ளது.**

கருத்துக் கணிப்புகளை இனி மக்கள் நம்புவார்களா என்பது ஐயமே. புதிய வாக்காளர்களும், இளம் வாக்காளர்களும் (அதில் அதிக அளவில் பெண்கள்) தவெகவுக்கு அதிக அளவில் வாக்களித்துள்ளனர். இதற்கு முஸ்லிம் பெண்களும் விதிவிலக்கல்ல. சினிமா மோகம் காரணமாகவே இவர்கள் தவெகவுக்கு வாக்களித்துள்ளனர் என்பது உண்மையே. எனினும் தவெகவுக்கு வாக்களித்த நடுத்தர வயதினர்கள், முதியவர்கள் ஒரு மாற்றம் தேவை எனக் கருதி வாக்களித்ததாக ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

துக்ளக் நிருபர் இதயா தமிழ்நாடெங்கும் பயணித்து, வாக்காளர்களைச் சந்தித்து சென்னை நகரில் தவெக 33 விழுக்காடு வாக்குகளைப் பெறுமென்றும், இதர மண்டலங்களில் 26 விழுக்காடு வரை பெறும் என்றும் கணித்திருந்தார். ஆனால் தற்போது தவெக 34.9 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. அரசுக்கு எதிரான எண்ணம் கொண்டவர்களின் வாக்குகள் அதிமுகவுக்கும் தவெகவுக்கும் பிரிவதால் திமுக கூட்டணி 150க்கும் மேற்பட்ட இடங்களைக் கைப்பற்றும் என அவரும் வேறு பல ஊடகவியலாளர்களும் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் விஜய் கட்சியின் வாக்கு விழுக்காடு கணிப்பையும்


தாண்டியுள்ளதால் அது திமுக கூட்டணியின் வெற்றி வாய்ப்பைப் பெருமளவு பாதித்துள்ளது என்பதே உண்மையாகும்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மொத்தமுள்ள 53 தொகுதிகளில் திமுக கூட்டணி இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. அதுபோல திருச்சி, மதுரை ஆகிய நகரங்களிலும் திமுக பெருமளவு தோல்வியைத் தழுவியுள்ளது.

தவெகவுக்கு அடுத்து திமுக கூட்டணி 73 இடங்களையும், அதிமுக கூட்டணி 53 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. திமுக எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெறுகிறது. எனினும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் தோல்வியைத் தழுவியிருப்பது திமுகவினரை மட்டுமல்ல, அதனைத்துத் தரப்பு மக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. இத்தனைக்கும் அவர், அந்தத் தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்தியுள்ளார். அவர் வெற்றி பெற்றிருக்க வேண்டும். சென்னை நகரிலும், அதன் நகர்ப்புறப் பகுதிகளிலும் வீசிய தவெக அலை அவரையும் வீழ்த்தி விட்டது என்றே தெரிகிறது. தமிழக உளவுத்துறையினர் மூலமாக தொகுதியின் உண்மை நிலையை அவர் நன்றாக அறிந்து கொண்டு, வேறு தொகுதிக்குச் சென்று போட்டியிட்டிருக்க வேண்டும் (உதாரணமாக திருவாரூர் தொகுதி) நடந்து முடிந்து விட்டது இனி பேசிப் பயனில்லை.

இம்முறை திமுக கூட்டணியில் சரியான ஒருங்கிணைப்பு இல்லை. காங்கிரஸ் கட்சி தொடக்கம் முதலே ஆட்சியில் பங்கு வேண்டும். அதிக இடங்கள் வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்து கூட்டணியில் பிரச்னையை ஏற்படுத்தியது. தவெகவுடன் சேர வேண்டும் என அக்கட்சியின் சில தலைவர்களே வெளிப்படையாகப் பேசி வந்தனர். ராகுல்காந்தியும் தவெகவுடன் கூட்டணி என்ற நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்ததாகக் கூறப்பட்டது. எனினும் தமிழக காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி ஆகியோரின் தலையீட்டின் பேரில் அக்கட்சி மூன்று இடங்களை அதிகமாகப் பெற்றுக் கொண்டு திமுக கூட்டணியில் நீடிக்க முடிவு செய்தது.

எனினும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இறுதிக் கட்டத்தில்தான் தமிழ்நாட்டிற்குப் பரப்புரைக்கு வந்தார். சில கூட்டங்களில் பேசி விட்டுப் போய் விட்டார். முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் அவர் இணைந்து பரப்புரை செய்வதைத் திட்டமிட்டுத் தவிர்த்து விட்டார். அவரின் இச்செயல் திமுக கூட்டணியில் ஒருங்கிணைப்பு இல்லை என்ற தோற்றத்தை வாக்காளர்களிடம் ஏற்படுத்தி விட்டது.



காங்கிரஸ் கட்சி கூட்டணியை விட்டுப் போய் விட்டால் என்ன மாற்று என்று கருதிய முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் தேமுதிகவைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டார். அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால் அதற்காக அவர் கொடுத்த விலை மிக அதிகம். ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி, பத்து சட்டமன்றத் தொகுதிகள் அக்கட்சிக்கு வழங்கினார். தேமுதிகவின் வாக்கு விழுக்காட்டை ஒப்பிடும்போது, பத்து தொகுதிகள் அக்கட்சிக்கு வழங்கியிருப்பது தேவை யற்றது என திமுகவினரும், கூட்டணிக் கட்சியினரும், ஊடகவியலாளர்களும் கருத்துத் தெரிவித்தனர். அதுவும் கூட்டணிக் கட்சிகளிடம் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் தொகுதிப் பங்கீடு விஷயத்தில் அவர் காட்டிய கடுமை நடுநிலையாளர்களுக்கே அதிருப்தியை ஏற்படுத்தியது.

அரசியலில் மிகவும் முதிர்ச்சி பெற்றவர் எனக் கருதப்பட்ட விசிக தலைவர் தொல். திருமாவளவன் இந்தத் தேர்தலில் மிகவும் தெளிவற்ற மனநிலையிலேயே இருந்தார். முதலில் காட்டுமன்னார் கோயில் சட்டமன்றத் தொகுதியில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்தார். பின்னர் ஊடகவியலாளர்களும், கட்சிக்காரர்களும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவர் ஏன் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும் எனக் கேள்வி எழுப்பிய பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

வாக்கு எண்ணிக்கை நாளுக்கு முன்தினம் செய்தியாளர்களிடம் பேசும் போது தனது கட்சிக்காரர்கள் பிற கூட்டணிக் கட்சிகள் போட்டியிட்ட சில தொகுதிகளில் சரியாகத் தேர்தல் பணியாற்றவில்லை. இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பேன் என அறிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் பாலகிருஷ்ணன், தொகுதிப் பங்கீடு விஷயத்தில் திமுக தலைமை தங்களை அலட்சியப்படுத்தியதாகத் தெரிவித்தார். மிகவும் சிறப்பான முறையில் சட்டமன்றத்திலும், ஊடக விவாதங்களிலும் செயல்பட்ட ஆளூர் ஷாநவாஸுக்கு விசிக இந்தத் தேர்தலில் வாய்ப்பளிக்காததும் பெரும் விவாதங்களை ஏற்படுத்தியது. திமுக கூட்டணியில் இணக்கமின்மை நிலவியதையே இவை காட்டுகின்றன.

தவெக குறித்து எந்தவிதமான விமர்சனங்களையும் முதல்வர் ஸ்டாலினோ அல்லது உதயநிதி ஸ்டாலினோ முன்வைக்கவில்லை. திமுக அரசு மீது விஜய் எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் பதிலளித்திருக்க வேண்டும். அது போல் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது; போதைப் பொருள்கள் புழக்கம் அதிகரித்து விட்டது; பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் தனது பரப்புரையின் போது குறிப்பிட்டார். இவற்றுக்கு முதல்வர் பதிலளித்துப் பேசவில்லை. தனது ஆட்சியின் சாதனைகளை மட்டுமே பரப்புரையின் போது குறிப்பிட்டார். உண்மையில் நாட்டிலுள்ள பிற மாநிலங்களை விடவும் தமிழ்நாடு இந்த விஷயங்களில் நன்றாகவே இருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இந்த உண்மையை அவர் மக்களுக்கு விளக்கியிருக்க வேண்டும்.

திமுகவும் சரி, அதிமுகவும் சரி, தமிழக வெற்றிக் கழகத்தை, அதன் தாக்கத்தைச் சரியாகக் கணிக்கத் தவறி விட்டன என்றே கருதுகிறேன். மரபு சார்ந்த வழிமுறைகளை விட்டு விட்டு அக்கட்சியின் தொண்டர்களும், ரசிகர்களும் சமூக வலைதளங்களிலேயே பரப்புரைகள் மேற்கொண்டனர். இது இளைஞர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அக்கட்சியை வெற்றிப் பாதைக்குக் கொண்டு சென்றுள்ளது.

தனிப் பெருங்கட்சியாக உருவெடுத்துள்ள போதிலும், தவெகவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 107 இடங்களைப் பெற்றுள்ள அக்கட்சிக்கு இன்னும் 11 இடங்கள் தேவைப்பட்டன. இச்சூழலில் காங்கிரஸ் கட்சியும், இடதுசாரிகள்,

விடுதலைச் சிறுத்தைகளும் ஆதரவு அளித்தன. தொடர்ந்து தவெக ஆட்சி அமைக்கத் தேவையான 118 இடங்களை எட்டியுள்ளது. ஆட்சிக்கு வராத போதே பாஜகவும், ஒன்றிய அரசையும் விமர்சிக்காத அவர் ஆட்சிக்கு வந்த பிறகு அப்படிச் செய்வார் என எதிர்பார்க்க முடியாது.

அதிமுக - பாஜக கூட்டணி தோல்வியுற்று மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருப்பதும் பாஜக ஒரே ஓர் இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றிருப்பதும் ஜனநாயக சக்திகளுக்கு குறிப்பாக சிறுபான்மையினருக்கு சற்று ஆறுதல் தரும் செய்தியாகும். அதிமுக பாஜக கூட்டணி ஆட்சிக்கு வரக் கூடாது என்று எண்ணியே அனைத்து முஸ்லிம் இயக்கங்களும் திமுக கூட்டணிக்கு ஆதரவு அளித்தன. அந்த நோக்கம் ஓரளவு நிறைவேறியிருப்பது நமக்குச் சற்று ஆறுதல் தரும் செய்தியே!

முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கின்ற தொகுதிகளில் தவெக முஸ்லிம் வேட்பாளர்களையே நிறுத்தியது. முஸ்லிம் இயக்கங்கள் சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் (பாபநாசம், வாணியம்பாடி, நாகப்பட்டினம், மணப்பாறை ஆகிய தொகுதிகளிலும் கடையநல்லூர், அறந்தாங்கி, இராமநாதபுரம், ஆம்பூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, திண்டுக்கல், பண்ருட்டி போன்ற தொகுதிகளிலும்) தவெக நிறுத்திய முஸ்லிம் வேட்பாளர்களை எதிர்த்தே களம் காண வேண்டிய நிலை இருந்தது. விஜயின் சினிமா கவர்ச்சிக்கு முஸ்லிம் இளைஞர்களும் இளைஞிகளும் பலியானதில் வியப்படைய ஒன்றுமில்லை.

விஜயின் தவெக பாஜகவுடன் கூட்டுச் சேரவில்லையே! எனவே அவரது கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதில் தவறு இல்லையே என்றும் அவர்கள் கேள்விகள் எழுப்பினர். விஜயின் தாக்கம் பிற சாதி, இன மக்களைப் போலவே முஸ்லிம்களின் மத்தியிலும் இருந்தது. எனினும் பெரும்பாலான முஸ்லிம்கள் திமுக கூட்டணிக்கே வாக்களித்துள்ளனர். பாளையங்கோட்டை, கடையநல்லூர், தென்காசி, வாசுதேவநல்லூர், திண்டுக்கல், ஆம்பூர், சென்னை துறைமுகம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, அரவக்குறிச்சி, திருச்செந்தூர், கோவை தெற்கு ஆகிய பல தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெற்றிருப்பதும், பாபநாசம், வாணியம்பாடி, நாகப்பட்டினம், சிதம்பரம் ஆகிய தொகுதிகளில் முஸ்லிம் இயக்கங்களைச் சார்ந்த வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருப்பதும் இதற்குச் சான்றாகும்.

**தவெக குறித்து எந்தவிதமான விமர்சனங்களையும் முதல்வர் ஸ்டாலினோ அல்லது உதயநிதி ஸ்டாலினோ முன்வைக்கவில்லை. விஜய், திமுக அரசு மீது எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் பதிலளித்திருக்க வேண்டும். திமுகவும் சரி அதிமுகவும் சரி தமிழக வெற்றிக் கழகத்தை, அதன் தாக்கத்தைச் சரியாகக் கணிக்கத் தவறி விட்டன.**

இந்த சட்டசபையில் மொத்தம் ஒன்பது முஸ்லிம் உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மமக 1, மனிதநேய ஜனநாயகக் கட்சி 1, காங்கிரஸ் 1, திமுக 1, தவெக 3. மணப்பாறைத் தொகுதியில் மமகவின் அப்துல் சமதும், நன்னிலத்தில் எஸ்டிபிஐ தலைவர் முபாரக்கும் வெற்றி வாய்ப்பை இழந்திருப்பது வருத்தமளிக்கிறது.

தமிழ்நாட்டில் 60 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட இயக்கம் சாராத ஒரு கட்சியின் ஆட்சி அமையவிருப்பதும், இரண்டு திராவிடக் கட்சிகளும் எதிர்வரிசையில் இருப்பதும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வே. மேலும் 1952க்குப் பிறகு எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத ஒரு தொங்கு சட்டமன்றம் இப்போது உருவாகியிருக்கிறது. அமையவிருக்கும் தவெகவின் ஆட்சி எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## கட்சிகள் பெற்ற இடங்களும், வாக்கு விழுக்காடும்

| | |
|---|---|
| **தமிழக வெற்றிக் கழகம்** | 108 |
| **திமுக கூட்டணி** | **73** |
| திமுக | 55 |
| காங்கிரஸ் | 5 |
| மதிமுக | 2 |
| விசிக | 2 |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் | 2 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 2 |
| இ.யூ. முஸ்லிம் லீக் | 2 |
| தேமுதிக | 1 |
| மனிதநேய மக்கள் கட்சி | 1 |
| மனிதநேய ஜனநாயக கட்சி | 1 |

| | |
|---|---|
| **அதிமுக கூட்டணி** | **53** |
| அதிமுக | 47 |
| பாஜக | 1 |
| அமமுக | 1 |
| பாமக | 4 |

**வாக்கு விழுக்காடு**

| | |
|---|---|
| தவெக | 34.90 |
| திமுக கூட்டணி | 31.39 |
| அதிமுக கூட்டணி | 27.24 |
| நாம் தமிழர் | 3.99 |
| மற்றவர்கள் | 2.48 |

### *பிற மாநிலங்கள்*

#### கேரளா

கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பிலிருந்த இடதுசாரி முன்னணி இந்தத் தேர்தலில் தோல்வியுற்று காங்கிரஸ் - முஸ்லிம் லீக் இடம் பெற்றுள்ள ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. வெற்றி பெற்ற இக்கூட்டணிக்கு 101 இடங்களும், தோல்வியுற்ற இடதுசாரி கூட்டணிக்கு 35 இடங்களும், பாஜகவுக்கு 3 இடங்களும் கிடைத்துள்ளன. காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் லீக் 22 தொகுதிகளை வென்றுள்ளது. மேலும் மலபார் பகுதியில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கும் துணை நின்றுள்ளது.

#### மேற்கு வங்காளம்

2011ஆம் ஆண்டிலிருந்து ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் திரிணாமுல் காங்கிரஸ் இம்மாநிலத்தில் ஆட்சியை இழந்துள்ளது. பாஜக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. இதன் மூலம் அக்கட்சியின் நெடுநாள் ஆசை அல்லது கனவு நிறைவேறியிருக்கிறது எனலாம். வெற்றி பெற்றுள்ள பாஜக 206 இடங்களையும், திரிணாமுல் காங்கிரஸ் 81 இடங்களையும், காங்கிரஸ் கட்சி 2 இடங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 1 இடத்தையும் கைப்பற்றியுள்ளன. முதல்வர் மம்தா பானர்ஜி இந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ளார்.

SIR விஷயத்தில் அவர் தேர்தல் ஆணையத்திற்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தினார். எனினும் இன்னும் 30 இலட்சம் பேருக்கு அங்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. கடந்த தேர்தலைப் போல இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் பெருமளவு மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என இந்து ஆங்கில நாளிதழ் தெரிவிக்கின்றது. 15 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த ஒரு ஆட்சி மீது மக்கள் சலிப்படைவது இயல்பே. அப்படித்தான் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தோல்வியை நாம் பார்க்க வேண்டும்.

#### அஸ்ஸாம்

அஸ்ஸாம் மாநிலத்தில் பாஜக மீண்டும் மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்துள்ளது. அக்கட்சி 102 இடங்களையும், எதிர்க்கட்சியான காங்கிரஸ் 21 இடங்களையும் பிற கட்சிகள் 3 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. 35 விழுக்காடு முஸ்லிம்கள் இருக்கின்ற இந்த மாநிலத்தில் பாஜக தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது.

அம்மாநில முதல்வர் ஹேமந்த் பிஸ்வாஸ் வங்க மொழி பேசும் முஸ்லிம்களுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறார். அவர்களை ஊடுருவல்காரர்கள் எனக் குற்றம் சாட்டுகிறார். மிகக் கடுமையான இந்துத்துவப் போக்கைக் கடைப்பிடிக்கின்றார். அதன் காரணமாகவே பாஜக அம்மாநிலத்தில் தொடர் வெற்றிகளை ஈட்டி வருகிறது. பாஜகவின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக காங்கிரஸ் வலுவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அங்குள்ள முஸ்லிம்களும் காங்கிரஸ் கட்சியைப் பெருமளவு நம்பவில்லை என்றே ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு வங்க மாநிலத்தில் பாஜக வெற்றி பெற்றிருப்பதன் மூலம் இந்தியாவின் கிழக்குப் பகுதியிலும், வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், பீகார், மேற்கு வங்காளம், ஒரிசாவிலும், காவிமயமாகி விட்டது. தெற்கில் மட்டுமே தற்போது மூன்று மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது. மேற்கே பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சியும், வடக்கே ஹிமாச்சல் பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சியும், கிழக்கில் ஜார்கண்ட்டில் ஜார்க்கண்ட் முக்தி மோர்சா ஆட்சியும் நடைபெறுகின்றன. பாஜகவின் கை நீண்டு கொண்டே போகிறது.

### புதுச்சேரி

இம்மாநிலத்தில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. காங்கிரஸ் - திமுக கூட்டணியில் சரியான ஒருங்கிணைப்பு இல்லாததும், காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர்களை எதிர்த்து அக்கட்சியினரே 12 தொகுதிகளில் போட்டியிட்டதும் பாஜக - என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணியின் வெற்றியை எளிதாக்கியுள்ளது. மிகச் சிறிய மாநிலம் என்பதால் இதன் தாக்கம் சற்றுக் குறைவே.




அன்பார்ந்த வாசகர்களுக்கு... இறையருளால் சிறந்த முறையில் இஸ்லாமியக் கருத்துகளை மையமாகக் கொண்ட ஆக்கங்களை பெண்கள் பயனடையும் வகையில் தொடர்ந்து வெளியிட்டு வரும்

**'உதயதாரகை' இதழ் தற்போது ஏழாவது ஆண்டில் பயணிக்கிறது.**

இந்த இதழை மேலும் மக்களிடம் பரப்பவும், 'பெண்' எழுத்தாளர்களை உருவாக்கவும், 2026 ஜூலை – ஆகஸ்ட் மாதங்களில் பரப்புரை இயக்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக **சிறுகதைப் போட்டியை** அறிவிக்கின்றோம்.

**போட்டிக்கான விதிமுறைகள்:**

- போட்டியில் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும்.
- கதை உங்கள் சொந்தப் படைப்பாகவும், இதுவரை வெளியிடப்படாததாகவும் இருக்க வேண்டும்
- மொழிபெயர்ப்புக் கதைகள் ஏற்கப்படமாட்டாது
- 1000 வார்த்தைகளுக்குள் தட்டச்சு (Type) செய்து அனுப்ப வேண்டும்
- உங்கள் பெயர், முகவரி, அலைபேசி எண் குறிப்பிட வேண்டும்
- இறுதித் தேதி: 30.05.2026 (இதற்குப் பிறகு வரும் கதைகள் ஏற்கப்படமாட்டாது)

முதல் பரிசு ₹ 5000

இரண்டாம் பரிசு ₹ 3000

மூன்றாம் பரிசு ₹ 2000

சிறுகதைகளை அனுப்ப: udhayatharagai2020@gmail.com

மேலும் விவரங்களுக்கு: 7200631469

பரிசு பெற்ற சிறுகதைகள் உதயதாரகை இதழில் பிரசுரிக்கப்படும்.

# அல் அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை - 7.

## புதிய மாணவர் சேர்க்கை

- 65 ஆண்டுகளாக எண்ணற்ற ஏழை எளிய ஆதரவற்ற எத்தீம் மாணவர்களை வளப்படுத்தி உயர்த்திய நிறுவனம்
- விசாலமான வகுப்பறைகளில் அனுபவமிக்க ஆலிம்களைக் கொண்டு முழுமையான தீன் கல்வி, விரிந்து பரந்த பள்ளிவாசலில் ஐவேளை தொழுகை வசதி
- தீன் வழி மாறாமல் கட்டுப்பாடான பாதுகாப்புடன், எங்கள் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அல் அமீன் மேல்நிலைப்பள்ளியில் +2 வகுப்பு வரை முழு நேர பள்ளிப் படிப்பு, தினமும் பள்ளிக்கு சென்று வர சொகுசு வாகனம்
- மேலும் தையற்கல்வி, கம்ப்யூட்டர், டைப்ரைட்டிங், ஸ்போக்கன் இங்கிலீஷ் போன்ற நவீன கல்வி.
- இங்கு பயின்று +2 முடிப்பவர்களுக்கு தகுதி அடிப்படையில் தரமான உயர்கல்வி வாய்ப்புகள் (பொறியியல், மருத்துவம், சட்டம், அறிவியல் & கலை)
- சுகாதாரமான தங்கும் இடவசதி, சுவையான உயர்தர உணவுகள், விதவிதமான ஆடைகள்







### அத்தனையும் முற்றிலும் இலவசம்

- ஏழ்மையான, ஆதரவற்ற, தாய் தந்தை இழந்த எட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகளுக்கு மட்டும்.
- தாய் தந்தை பற்றிய விபரங்களுக்கு ஜமாஅத் கடிதமும், குடும்ப அட்டை, ஆதார் அட்டை நகலுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## அல் அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை - 7.



மேலும் விபரங்களுக்கு **98420 21786, 97894 89494**

# செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி

Counselling Code **5921**

**AUTONOMOUS**

**Accredited with 'A+' Grade by NAAC**

Approved by AICTE, New Delhi and Affiliated to Anna University, Chennai | Recognized Under section 2 (f) and 12 B of the UGC Act 1956
NBA Accredited UG Courses : ECE, EEE & MECH | Anna University Approved Research Centres : EEE, CSE, MECH & ECE

Dr. E.M. Abdullah Campus, Ramanathapuram - 623 502, Tamil Nadu.
Ph: 04567 - 222 234, Mobile : 84893 04000, 87548 88877
E-mail : office@syedengg.ac.in, saec@syedengg.ac.in
Web : www.syedengg.ac.in



**ADMISSION OPEN**

## இராமநாதபுரம் மாவட்டத்தில்
## தன்னாட்சி அந்தஸ்து பெற்ற முதல் பொறியியல் கல்லூரி

+2 வில் 500 மற்றும் 550 மதிப்பெண்களுக்கு மேல் பெறுபவர்களுக்கு கல்விக்கட்டண சலுகை

+2 CBSE பாடப்பிரிவுகளில் 400 மற்றும் 450 மதிப்பெண்களுக்கு மேல் பெறுபவர்களுக்கு கல்விக்கட்டண சலுகை

### UG COURSES OFFERED

- B.E. - Computer Science and Engineering
- B.E. - Electronics and Communication Engineering
- B.E. - Electrical and Electronics Engineering
- B.E. - Mechanical Engineering
- B.E. - Civil Engineering
- B.E. - Biomedical Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science
- B.Tech. - Computer Science and Business Systems
- B.Tech. - Information Technology

### PG COURSES OFFERED

- M.E. - Computer Science and Engineering
- M.E. - Embedded System Technologies
- M.E. - VLSI Design
- M.E. - Manufacturing Engineering
- MBA - (Marketing, Finance, Human Resource, Operations & Business Analytics)
- Ph.D. - EEE, CSE, ECE & MECH.

**முஸ்லிம் மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கட்டணத்தில் சிறப்புச் சலுகை**

Minimum : **2.4 LPA**
Maximum : **50 LPA**

**Placement Salary Pacackage**

**OUR RECRUITERS**

**For Enquiries : 98420 72052, 90479 51189, 98940 44944**

# மொழிப் பாடங்களில் இவ்வளவு வாய்ப்புகளா?

**- நஸ்ரத் ரோஸி**

எந்த தொழில்முறைக் கல்வியும் எனக்கு விருப்பமில்லை. எனக்கு மொழி - இலக்கியம் படிக்கத்தான் ஆசை என மாணவர்கள் கூறினால் அதையும் கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்க பெற்றோரே! ஆங்கிலம் படித்தால் ஆசிரியராகத்தான் போக வேண்டும் என்றல்ல, கல்லூரியில் கற்றது போக நாமே நம்மைக் கொஞ்சம் மெருகேற்றிக்கொண்டு மொழிப்புலமையை அதிகரித்துக் கொள்ளலாம்.

- சொற்களை அகராதிப்படுத்தும் ஒரு Lexicographer ஆகலாம்.
- இலக்கண விதிகளைப் பயன்படுத்தி புதிய, எளிய சொற்றொடர்களை வடிவமைக்கும் ஒரு Grammarian ஆகலாம்.
- நிறைய புத்தகங்களைப் படித்தால் நமது அனுபவங்களைக் கொஞ்சமாக இணைத்து ஒரு புத்தகம் எழுதும் ஒரு Author ஆகலாம்.
- ஆங்கில மொழியுடன் தொடர்புடைய பிற மொழிச்சொற்களை ஆராய்ச்சி செய்து பட்டியல்படுத்தும் ஒரு Linguistic and Etymologist ஆகலாம்.
- ஆங்கிலச் சொற்களைச் சரியான, சுருக்கமான முறையில் உச்சரிக்கக் கற்றுத் தரும் ஒரு Phonetician ஆகலாம். மேலும் சரியான எழுத்துகளை எழுதக் கற்றுத் தரும் Spelling Orthographer ஆகலாம். சிறுவர் பள்ளிகளில் இவர்களுக்கு நிறைய பணிகள் கிடைக்கிறது.
- மேடைப் பேச்சுகளில் எப்படி ஆங்கிலத்தை நளினமாகப் பேசுவது, வணிக, கார்ப்பரேட் நிறுவனங்களில் எப்படித் திக்காமல் துரிதமாகப் பேசுவது எனக் கற்றுத் தரும் Orator ஆகலாம். இப்படியானவர்களைப் படிக்காத நடிகர், நடிகைகளும் அரசியல்வாதிகளும் இன்னும் தொழில்துறை நடத்தும் முதலாளிகளும் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பணிக்கு அமர்த்தி வருகின்றனர்.



ஆங்கிலம் மாத்திரமல்ல தமிழுக்கும் இதே வாய்ப்புகள் பொருந்தும். வெளிநாடுகளில் தமிழர்கள் நெருக்கமாக வசிக்கும் பகுதிகளிலுள்ள தமிழ் பயிற்றுவிக்கும் தனிப் பள்ளிகளில் உச்சரிப்பு, இலக்கணப் பிழையின்றி எழுதுதல், சங்கப்பாடல் அவற்றின் விளக்கங்கள் கற்றுத்தருதல், கட்டுரை எழுத பயிற்சி கொடுத்தல் இப்படிப் பலவிதமான பணிகளைத் தேர்ந்தெடுத்து நமக்கான வாழ்வாதார வாய்ப்புகளைத் தேடிப் பிடித்துக் கொள்ள முடியும். ஆனால் நம் நாட்டில் டாக்டரும் எஞ்சினியரும் தான் பிழைக்க முடியும் ஏனையோர் எல்லாம் கையேந்தித் தான் பிழைக்க முடியும் என்ற ஒரு பிம்பத்தைக் கட்டமைத்து வைத்திருக்கின்றனர்.

தமிழோ ஆங்கிலமோ அல்லது வேறு எந்த மொழியோ படித்தால் அதனைக் கற்பிக்கும் ஆசிரியராகத்தான் ஆக முடியும் என்ற கூற்று உண்மைதான். ஆனாலும் அந்த ஆசிரியப் பணியையே மேற்சொன்னபடி பல பரிமாணங்களில் எடுத்துச் செல்ல முடியும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உங்களுக்குக் கொஞ்சமாக ஒரு மொழி தெரிந்தால்கூட அதன் இலக்கணங்களைப் படித்துக்கொண்டு அகராதிகளுடைய உதவியுடன் அதனை நம் மொழிக்கு மாற்றி வைக்கும் ஒரு மொழிபெயர்ப்பாளராகக்கூட ஆகலாம். இது எல்லாவற்றுக்கும் அந்த ஒரு பட்டம் மிக முக்கியம். வெறுமனே ஒரு தொழிலைச் செய்வதைக் காட்டிலும் அது சம்பந்தப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்துக் கொண்டால் நாம் செய்யும் பணிக்குப் பெரு மதிப்பு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

வேலைகளை உருவாக்கத் தெரிந்த ஒருவர் அதை எங்கும் போய் தேடிக் கொண்டிருக்க மாட்டார். நாம் படித்துப் பெறும் பட்டம் நமக்கான வாசலைத் திறக்கும் சாவி மட்டுமே! அதைக்கொண்டு முன்னேற்றப் படிகளை அமைப்பது நமது திறமையிலும் ஈடுபாட்டிலும் தான் ஒளிந்துள்ளது.

## அறிஞர்களின் கல்விப் பார்வை

- செல்வம் செலவழிக்கச் செலவழிக்கக் குறையும். ஆனால் கல்வி செலவழிக்கச் செலவழிக்க வளரும.
  **- அலீ(ரலி)**
- கல்வி உன்னைப் பாதுகாக்கும். ஆனால் செல்வத்தை நீதான் பாதுகாக்க வேண்டும்.
  **- அலீ(ரலி)**
- எதைக் கொண்டு மனிதன் பயனடைகிறானோ அதுவே கல்வி ஆகும்.
  **- இமாம் ஷாஃபி(ரஹ்)**
- செயல்படுத்தப்படாத கல்வி பைத்தியக் காரத்தனம். கல்வியின்றி செய்யப் படும் செயல் ஒரு போதும் முழுமை அடையாது.
  **- இமாம் கஸ்ஸாலி(ரஹ்)**
- கற்ற அனைத்தையும் மறந்த பிறகும் எது மிஞ்சியிருக்கிறதோ அதுவே கல்வி.
  **- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**
- அறிவில் முதலீடு செய்வது மிகச் சிறந்த பலனை அளிக்கும்.
  **- பெஞ்சமின் பிராங்க்ளின்**
- உலகத்தை மாற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய மிக வலிமையான ஆயுதம் கல்வி.
  **- நெல்சன் மண்டேலா**
- கல்வி என்பது எதிர்காலத்திற்கான பாஸ்போர்ட்
  **- மால்கம் எக்ஸ்**
- கற்றல் படைப்பாற்றலைத் தரும், படைப்பாற்றல் சிந்தனையைத் தூண்டும், சிந்தனை அறிவைத் தரும், அறிவு உங்களை மகத்தானவராக்கும்.
  **- ஏ.பி.ஜே. அப்துல் கலாம்**

**தொகுப்பு: எம். நூருல் அமீன்**

# மனிதகுலம் முழுவதற்குமான இறைத்தூதர்

**(இவர்களிடம்) கூறும்: 'நாங்கள் செய்த குற்றங்களைப் பற்றி உங்களிடம் கேட்கப் பட மாட்டாது. நீங்கள் செய்து கொண்டிருப்பவை பற்றி எங்களிடம் கேட்கப்பட மாட் டாது.'[44] கூறும்: 'நம்முடைய அதிபதி நம்மை ஒன்று கூட்டுவான். பிறகு நம்மிடையே சரியாகத் தீர்ப்பு வழங்குவான். அவனே யாவற்றையும் அறிந்திருக்கின்ற ஆற்றல் மிக்க தீர்ப்பாளனாவான்.'[45] (இவர்களிடம்) கூறும்: 'நீங்கள் எவர்களை அவனோடு இணையானவர்களாய்ச் சேர்த்து வைத்திருக்கின்றீர்களோ அவர்களை எனக்குக் கொஞ்சம் காண்பியுங்களேன்!'[46] ஒருபோதும் முடியாது! உண்மையில் யாவற்றையும் மிகைத்தோனும், நுண்ணறிவாளனும் அந்த அல்லாஹ் ஒருவன்தான்!**

**மேலும், (நபியே!) நாம் உங்களை மனிதகுலம் முழுவதற்கும் நற்செய்தி அறிவிப்ப வராகவும் எச்சரிக்கை செய்பவராகவும்தான் அனுப்பி வைத்திருக்கின்றோம். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் அறிவதில்லை.[47]**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 25-28**

**44.** மேலே சொல்லப்பட்ட செய்தி ஏற்கனவே வாசகரை சிந்தித்து யோசித்துப் பார்க்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளிவிட் டது. இப்போது அவர் இன்னும் அதிகமாக சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்பதன் பக்கம் கவனம் செலுத்தத் தொடங்குகிற விதத்தில் கூடுதலாக இந்த வாசகம் சொல்லப்படுகின்றது. இதன் மூலமாக 'நேர்வழி, வழிகேடு ஆகியவற்றைப் பற்றிய விவகாரத்தில் சரியான, துல்லியமான முடிவெடுப்பது நம்முடைய சொந்த நலன் சார்ந்த விவகாரமாகும்' என்கிற விழிப்பு உணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

அதாவது, ஒரு பேச்சுக்கு நாங்கள்தாம் வழிகேடுகளில் விழுந்துவிட்டவர்கள் என்று வைத்துக் கொண்டால் அந்த வழிகேட்டினால் விளைகின்ற இழப்புகள் அனைத்தையும் நாங் கள்தாம் எதிர்கொள்வோம். அதன் காரண மாக நீங்கள் எந்தவொரு விசாரணைக்கும் ஆட்படுத்தப்பட மாட்டீர்கள். உங்களுக்கு எந்தப் பாதகமும் நேராது. எனவே எந்த வொரு கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்வற்கு முன்னால் நாம் ஒன்றும் தவறான முடிவெக்க வில்லையே; தவறான பாதையில் செல்ல வில்லையே என்கிற கோணத்தில் நல்ல முறையில் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்துக் கொள்வது முழுக்க முழுக்க நம்முடைய நலன் சார்ந்த விஷயமாகும்.

இதே போன்று நீங்களும் எங்களின் எந்த வொரு ஆதாயத்துக்காக அல்ல, அதற்கு மாறாக, முழுக்க முழுக்க உங்களின் நலன் களுக்காக எந்தவொரு கோட்பாட்டிலும் உறுதி யாக நிலைத்திருப்பதற்கு முன்பாக நாம் ஒன்றும் அசத்தியக் கோட்பாட்டில் நம்முடைய வாழ்வின் வளங்கள் அனைத்தையும் குவிக்க வில்லையே என்கிற கோணத்தில் நல்ல முறை யில் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த விவகாரத்தில் நீங்கள் கொஞ்சம் இடறி விழுந்தாலும்கூட அது உங்களுக்குத் தான் இழப்பை ஏற்படுத்துமே அன்றி, எங்களுக்கு எந்த ஊறும் நேராது.

**45.** இந்த விவகாரத்தைக் குறித்து ஆய்ந்து பார்த்தே ஆக வேண்டும் என்ற

28 ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# அருள் நிறைந்த அர.:.பா நாள்

நபி(ஸல்)கூறினார்கள்:

‘அரஃபா நாள் அன்று அல்லாஹ் பூமிக்கு அருகில் வானத்தில் இறங்கு கின்றான். மேலும் ஹஜ் செய்பவர்கள் குறித்து தன்னுடைய வானவர்களின் அவையில் பெருமிதம் கொள்கின்றான்.

மேலும் கூறுகின்றான்: ‘என்னுடைய அடியார்களைப் பாருங்கள். உடல் களைத்து, தூசு படிந்த தலைமுடியுடன், வழி நெடுகக் குரல் எழுப்பியவாறு என்னை நோக்கி வந்திருக்கின்றார்கள். நான் அவர்களை மன்னித்துவிட் டேன் என்பதற்கு உங்களைச் சாட்சிகளாய் ஆக்குகின்றேன்’.

இதனைக் கேட்டதும் வானவர்கள் சொல்வார்கள்: ‘அதிபதியே! அவர்களில் இன்ன மனிதரும் இருக்கின்றார். அவர் தீயவர் என்றும், பெரும் பாவி ஆவார் என்றும் அவரைக் குறித்துச் சொல்லப்படுகின்றது. இன்னும் (பாவிகளான) இன்ன மனிதரும், இன்ன பெண்ணும் அவர்களில் இருக்கின்றார்கள்’. வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் பதிலளிப்பான்: ‘நான் அவர் களையும் மன்னித்துவிட்டேன்’.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அரஃபா நாளைக் காட்டிலும் வேறு எந்த நாளிலும் மக்கள் மிக அதிகமான அளவில் நரகத்திலிருந்து விடுதலை பெறுவதில்லை’.

அறிவிப்பாளர் : ஜாபிர்(ரலி)
நூல் : ஷரஹ் சுன்னாஹ்

அரஃபா நாள் அன்று உலகத்தார் மீது அல்லாஹ் பரிவுடன் நடந்து கொள் கின்றான். துல்ஹஜ் மாதத்தின் ஒன்பதாம் நாள்தான் அரஃபா நாள் ஆகும். இந்த நாளில்தான் ஹஜ் பயணிகள் அனைவருமே அரஃபா மைதானத்தில் ஒன்று திரள்கின்றார்கள்.

இறைவனின் அடியார்களின் இந்த ஒன்றுகூடல் மிகுந்த மன எழுச்சியை ஏற்படுத்தக்கூடியதாகும். இது எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற திறன் கொண்டது எனில். இதயத்தில் படிந்திருக்கக்கூடிய கடைந்தெடுத்த களங் கத்தையும் முற்றாகத் துடைத்தொழித்துவிடும்.

என்றாலும் இந்த விலைமதிப்புமிக்க தருணங்களையும் நாளையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளாமல் ஹஜ்ஜிலிருந்து திரும்பிய உடனே ஹஜ் எந்தெந்த அசிங்கங்களிலிருந்தும் பாவச் செயல்களிலிருந்தும் ஒருவருக்கு விடுதலை தருகின்றதோ அவற்றிலேயே மும்முரமாக இறங்கிவிடுவது வேறு கதை.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஊக்கமளிக்கின்ற இறுதியான, மிகப் பெரும் உந்துசக்திதான் இது. இதன் பக்கம் வாசகர்களின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

அதாவது இந்த வாழ்வில் உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான வேறுபாடு சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு இணையானதே; ஒன்று நீங்கள் சத்தியத்தில் இருக்கின்றீர்கள் அல்லது நாங்கள் சத்தியத்தில் இருக்கின்றோம் என்பதோடு விஷயம் முடிந்துவிடுவதில்லை. அதற்கு மாறாக நாங்களும் நீங்களும் நாம் இரண்டு தரப்பினருமே ஒரு நாள் நம்முடைய அதிபதியின் முன்னால் நிற்க இருக்கின்றோம் என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும்.

அந்த அதிபதி எப்படிப்பட்டவன் எனில் அவன் பேருண்மைகளை அறிந்தவன் மட்டுமல்லன்; நம் இரண்டு தரப்பினரின் நிலைமைகளையும் கூட நல்ல முறையில் அறிந்தவன் ஆவான். அந்த நாளில் அவனுக்கு முன்னால் நிற்கின்ற போது உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் யார் சத்தியத்தில் இருக்கின்றார்? யார் அசத்தியத்தில் இருக்கின்றார் என்பது பற்றிய தீர்ப்பு வழங்கப்படும். அதற்கும் மேலாக உங்களுக்கு சத்தியத்தைப் புரியவைப்பதற்காக நாங்கள் என்னவெல்லாம் செய்தோம் என்பது பற்றியும், நீங்கள் அசத்திய வழிபாட்டில் உங்களுக்கு இருந்த பிடிவாதத்தால் உந்தப்பட்டு எங்களை எப்படியெல்லாம் எதிர்த்தீர்கள் என்பது பற்றியும்கூட விசாரித்து தீர்ப்பு வழங்கப்படும் என்றும் உணர்த்தப்படுகின்றது.

**46.** வணக்கத்துக்குரியவர்களாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்ற இவற்றை நம்பி இத்துணை பெரும் ஆபத்தை விலைக்கு வாங்காதீர்.

வணக்கத்துக்குரியவர்களாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றவர்களில் யார்தான் இறைவனின் நீதிமன்றத்தில் உங்களுக்கு ஆதரவாக எழுந்து நின்று குரல் கொடுக்கின்ற அளவுக்கும், மேலும் இறைவனின் பிடியிலிருந்து உங்களைக் காப்பாற்றுகின்ற அளவுக்கும் வலிமைமிக்கவராக இருக்கின்றார், கொஞ்சம் எனக்குச் சொல்லுங்களேன்.

**47.** நீங்கள் இந்த நகரத்துக்காகவோ, இந்த நாட்டுக்காகவோ, இந்தக் காலகட்டத்துக்காகவோ மட்டுமே இறைத்தூதராக அனுப்பப்படவில்லை. அதற்கு மாறாக உலகத்தின் ஒட்டுமொத்த மனிதர்களுக்காகவும், எல்லாக் காலங்களுக்காகவும் இறைத்தூதராக அனுப்பப்பட்டிருக்கின்றீர்கள். ஆனால் உங்களின் இந்த சமகாலத்திய மக்கள், உங்களின் சொந்த ஊர்க்காரர்கள் உங்களின் மாண்பையும் சிறப்பையும் புரிந்துகொள்ளவில்லை. தங்கள் மத்தியில் எத்துணை பெரும் சிறப்புக்கும் மாண்புக்கும் உரிய ஆளுமை அருளப்பட்டிருக்கின்றார் என்பதை அவர்கள் சற்றும் உணரவில்லை.

நபிகளார்(ஸல்) தம்முடைய நாட்டு மக்களுக்காகவோ, தம்முடைய காலத்து மக்களுக்காகவோ மட்டுமே இறைத்தூதராக அனுப்பப்படவில்லை. அதற்கு மாறாக மறுமை நாள் வரை வரக்கூடிய ஒட்டுமொத்த மனித குலத்துக்காக, எல்லா மனிதர்களுக்காகவும் இறைத்தூதராக அனுப்பப்பட்டிருக்கின்றார்கள் என்கிற விவரம் மகத்துவம் மிக்க குர்ஆனில் பல்வேறு இடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக:

'மேலும் இந்தக் குர்ஆன் எனக்கு வஹி மூலம் அருளப்பட்டது. எதற்காகவெனில், உங்களையும் இன்னும் யார் யாரையெல்லாம் இது எட்டுகிறதோ அவர்களையும் இதன் மூலம் நான் எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதற்காக..!' (திருக்குர்ஆன் 6:19)

'(முஹம்மதே!) நீர் கூறும்: 'மனிதர்களே! திண்ணமாக, வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியாகிய அல்லாஹ்வின் தூதராக நான் உங்கள் அனைவர்பாலும் அனுப்பப்பட்டுள்ளேன்.' (திருக்குர்ஆன் 7:158)

'(நபியே!) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்.' (திருக்குர்ஆன் 21 :107)

'பெரும் பாக்கியம் நிறைந்தவனாக இருக்கின்றான், தன்னுடைய அடியார் மீது (சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டும்) இந்த ஃபுர்கானை (அதாவது

குர்ஆனை) இறக்கி வைத்தவன். அகிலத்தார் அனைவருக்கும் (அவர்) எச்சரிக்கை செய்யக் கூடியவராகத் திகழ வேண்டும் என்பதற்காக!' (திருக்குர்ஆன் 25:1)

இதே கருத்தை நபிகளாரும் ஏராளமான நபிமொழிகளில் வெவ்வேறு விதங்களில் எடுத்துரைத்திருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக:

'நான் கருப்பர்கள், வெள்ளையர்கள் என எல்லாத் தரப்பினருக்காகவும் அனுப்பப்பட்டிருக்கின்றேன்.' (அறிவிப்பாளர்: அபூ மூஸா அஷ்அரி(ரலி); முஸ்னத் அஹ்மத்)

'நான் பொதுவாக எல்லா மனிதர்களுக்காகவும் அனுப்பப்பட்டிருக்கின்றேன். இத்தனைக்கும் எனக்கு முன்பு வந்த இறைத்தூதர்கள் அனைவருமே தத்தமது சமூகத்தாருக்காகவே அனுப்பப்பட்டிருக்கின்றார்கள்.'

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் இப்னு ஆஸ்(ரலி); முஸ்னத் அஹ்மத்)

'இதற்கு முன்பெல்லாம் ஒவ்வொரு இறைத்தூதரும் தத்தமது சமுதாயத்தாருக்காகவே அனுப்பப்பட்டு வந்தார்கள். மேலும், நான் உலக மனிதர்கள் அனைவருக்காகவும் அனுப்பப்பட்டு இருக்கின்றேன்.' (அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்துல்லாஹ்(ரலி); புகாரி, முஸ்லிம்)

'என்னுடைய வருகையும் மறுமையும் இவ்வாறாக இருக்கின்றன என்று கூறியவாறு நபிகளார்(ஸல்) தம்முடைய இரண்டு விரல்களை உயர்த்திக் காண்பித்தார்கள்.' (புகாரி, முஸ்லிம்)

அதாவது இரண்டு விரல்களுக்கு நடுவில் மூன்றாவது விரல் இல்லாததைப் போன்றே எனக்கும் மறுமைக்கும் இடையில் எந்தவொரு தூதுத்துவமும் இல்லை. எனக்குப் பிறகு மறுமைதான் நிகழப் போகின்றது. மறுமை வரை வேறு எந்தவொரு இறைத்தூதரும் வரப் போவதில்லை.

*(தொடரும்)*


**HIJAZ**

**LEATHERS PVT. LTD.,**

**Tanners & Exporters of Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

# இப்ராஹீம்(அலை)
## அவர்களின் அழகிய அணுகுமுறை

- A.R. கமருன்னிசா ஜாஃபர் அலீ

இஸ்லாம் நற்குணங்களை ஈமானுடன் (நம்பிக்கை) இணைக்கிறது. ஒருவரின் நம்பிக்கை வலுவாக இருந்தால் செயலும் நற்குணங்களால் நிரம்பியதாக இருக்கும். தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்ஜைக் கவனத்துடன் பேணுவது போல் நற்குணங் களையும் பேண வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

உண்மை, நேர்மை, பொறுமை, கருணை, அன்பு போன்ற நற்குணங்களில் தலை யானது மரியாதையுடன் உரையாடுதல். ஒரு சமூகத்தின் நாகரிகத்தை அழகிய உரை யாடல் வெளிப்படுத்துகிறது. அது குடும்பம், சமூகம் ஆகியவற்றின் அமைதி, ஒற்றுமை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் மூலதன மாகிறது.

பணம், பொருள் ஆகியவை ஒரு சமூ கத்தை வளர்க்கலாம்; ஆனால் மரியாதை நிறைந்த உரையாடல் அந்த வளர்ச்சியை நிலைநிறுத்தும். இன்றைய காலத்தில் மரியாதை குறைந்து வருகிறது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஈராக் நாட்டில் பிறந்த நபி இப்ராஹீம்(அலை) அவர்களின் அணுகுமுறை நமக்கான சிறந்த முன்மாதிரி. இப்ராஹீம்(அலை) அவர் களின் குடும்பம் தியாகத்தின் முன்மாதிரி மட்டுமல்ல சிறந்த அணுகுமுறையின் முன் மாதிரியுமாகும்.

படைத்த இறைவனிடமும், சிலைகளை உருவாக்கி விற்கும் தந்தையிடமும், சிலை வணக்கம் புரியும் சமூகத்தினரிடமும், உயி ரையே தியாகம் செய்ய முன்வந்த மகன் இஸ் மாயீல்(அலை) அவர்களிடமும், மனைவி ஹாஜரா(அலை) அவர்களிடமும் நபி இப் ராஹீம் (அலை) அவர்கள் நிகழ்த்திய உரையாட லும், அணுகுமுறையும் படிப்பினைக்குரியது.

### இறைவனுடன்..!

‘என் அதிபதியே! மரித்தோரை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய் என்பதை எனக்குக் காண்பிப்பாயாக!’ என்று இப்ராஹீம் கூறிய சந்தர்ப்பத்தையும் நினைவுகூரும். அப் பொழுது இறைவன், ‘நீர் நம்பிக்கை கொள்ள வில்லையா?’ என்று கேட்டான்: ‘ஆம்! (நம்பிக்கை கொண்டுள்ளேன்) எனினும் என் னுடைய மனம் அமைதியடையும் பொருட்டே இவ்வாறு கேட்கிறேன்!’ என்று அவர் கூறினார்.

அதற்கு அல்லாஹ், ‘அப்படியானால் நீர் நான்கு பறவைகளைப் பிடித்து அவற்றை (நன்கு பழக்கி) உம்முடன் இணங்கி இருக்கச் செய்யும். பின்னர் (அவற்றைத் துண்டு களாக்கி) அவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு மலையில் வைத்துவிடும்; பிறகு அவற்றை நீர் கூப்பிடும்! அவை உம்மிடம் விரைந்து வந்துவிடும். மேலும் அல்லாஹ், நிச்சயமாக வல்லமைமிக்கோனும் நுண்ணறி வுடையோனுமாயிருக்கின்றான் என்பதை நீர் நன்கு அறிந்து கொள்ளும்’ என்று கூறினான். (திருக்குர்ஆன் 2:260)

இந்த உரையாடல் இப்ராஹீம் நபி அவர்களின் மிக ஆழமான ஈமானையும்,

நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றது. இப்ராஹீம்(அலை) அவர்கள் நெருப்பில் வீசப்பட்டபோது, அல்லாஹ் கூறினான்: 'ஓ நெருப்பே! இப்ராஹீமுக்குக் குளிர்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் இரு. நெருப்பு அவருக்குத் தீங்கிழைக்கவில்லை' (திருக்குர்ஆன் 21:69)

இப்ராஹீம்(அலை), இஸ்மாயீல்(அலை) இருவரும் சேர்ந்து கஅபாவின் சுவர்களை உயர்த்திக் கட்டிவிட்டு இவ்வாறு பிரார்த்தித்தார்கள்: 'எங்கள் இறைவா! எங்களுடைய இப்பணியை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீதான் எல்லாவற்றையும் செவியேற்பவனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய்' (திருக்குர்ஆன் 2:127)

இப்ராஹீம்(அலை) அவர்கள் மக்கா நகர் குறித்து அல்லாஹ்விடம் வேண்டினார்கள்: 'என் இறைவனே! (மக்காவாகிய) இந் நகரத்தை அமைதி அளிக்கக்கூடியதாய் ஆக்குவாயாக! மேலும் என்னையும், என் மக்களையும் சிலைகளை வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!' (திருக்குர்ஆன் 14:35)

### தந்தையுடன்..!

நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் தந்தையுடன் நிகழ்த்திய உரையாடலை குர்ஆன் மிக அழகாகப் பதிவு செய்துள்ளது.

நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் தம் தந்தையிடம் மிக மென்மையாக 'அப்பா (யா அபதி)' என்று அழைத்துக் கூறியதை திருக்குர்ஆன் 19ஆம் அத்தியாயம் 42 முதல் 45 வசனங்களில் பார்க்கலாம். அந்த உரையாடலின் சாரம்சத்தைப் பாருங்கள். 'கேட்க, பார்க்க இயலாத, எந்தப் பயனும் தராதவற்றை ஏன் வணங்குகிறீர்கள்?, உங்களுக்குக் கிடைக்காத ஞானம் எனக்குக் கிடைத்துள்ளது. எனவே என்னைப் பின்பற்றுங்கள்; நான் உங்களுக்கு நேரான வழியைக் காட்டுவேன். ஷைத்தானுக்கு அடிபணியாதீர். இறைவனுடைய தண்டனைக்கு நீங்கள் இலக்காகி விடுவீர்களோ என்று நான் அஞ்சுகிறேன்'

உண்மையை நேராகக் கூறினாலும், மரியாதையைக் கைவிடவில்லை. அன்போடு எச்சரித்தார்கள், பயமுறுத்தவில்லை. ஆனால் தந்தை கோபமானார்.

தந்தை கோபமாகக் கூறினார்: 'நீ என் தெய்வங்களை நிராகரித்து விட்டாயா? இதனை நீ தவிர்த்துக் கொள்ளாவிட்டால் உன்னை நான் கல்லால் அடிப்பேன். என்னை விட்டுப் பிரிந்து போய்விடு'

இதைக்கேட்ட நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் மிக அமைதியாகக் கூறினார்கள்: 'உங்கள் மீது அமைதி உண்டாகட்டும். நான் உங்களுக்காக என் இறைவனிடம் இறைஞ்சுவேன்'



### மனைவி ஹாஜராவுடன்..!

இப்ராஹீம்(அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின்படி, தன் மனைவி ஹாஜரா(அலை), குழந்தையான இஸ்மாயீல்(அலை) இருவரையும் வெறிச்சோடிய மக்காவின் பாலைவனப் பகுதியில் விட்டுப் பிரியும்போது, ஹாஜரா(அலை) அவர்கள் கேட்டார்: 'எங்களை இந்த ஆள் நடமாட்டமில்லாத பாலைவனத்தில் விட்டுச் செல்கிறீர்களா?' என இரு முறை கேட்டார். இப்ராஹீம்(அலை)

அவர்கள் அமைதியாக இருந்தார்கள். மீண்டும் ஹாஜரா(அலை) கேட்டார்: ‘இது அல்லாஹ்வின் கட்டளையா?’ அதற்கு இப்ராஹீம் (அலை) அவர்கள், ‘ஆம்’ என்றார்கள்.

ஹாஜரா(அலை) முழு நம்பிக்கையுடன் கூறினார்: ‘அப்படியானால் அல்லாஹ் எங்களைக் கைவிடமாட்டான்’. இந்த ஆரோக்கியமான உரையாடல் எத்தனை நம்பிக்கையையும் படிப்பினையும் தருகிறது.

மக்கா ஒரு புனித நகரமானதற்கும் ஸம்ஸம் நீர் உருவானதற்கும், ஸபா மர்வா இடையே குதியோட்டம் ஓடுவதற்கும் இந்த நிகழ்வு அடித்தளமாக அமைந்தது.

**மகனுடன்..!**

இப்ராஹீம்(அலை) அவர்களின் கனவில், மகன் இஸ்மாயீலைப் பலியிட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை பிறப்பித்தான். நபி இப்ராஹீம் அவர்கள் தனது மகனுக்குக் கட்டளையிடவில்லை; மாறாக ஆலோசனை போல கூறினார்கள்.

‘என் மகனே! நான் உன்னைப் பலி கொடுக்கக் கனவு கண்டேன். இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?’ இஸ்மாயீல் (அலை) அவர்கள் அவர் மிகுந்த நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் கூறினார்: ‘உங்களுக்கு கட்டளையிடப்பட்டதைச் செய்யுங்கள். அல்லாஹ் நாடினால், என்னைப் பொறுமையாளர்களில் ஒருவனாகக் காண்பீர்கள்’

அல்லாஹ் அவர்களின் இச்செயலை ஏற்றுக்கொண்டான். இஸ்மாயீல்(அலை) அவர்களுக்குப் பதிலாக ஒரு ஆட்டை அனுப்பி பலியிடச் செய்தான்.

**சமூகத்தில்..!**

நம்ரூத் அரசனுக்கும் இப்ராஹீம்(அலை) அவர்களுக்கும் இடையே நடந்த உரையாடல், உண்மை, ஆணவம் இரண்டிற்குமிடையேயான ஒரு முக்கியமான உரையாடலாகும். நம்ரூத், தன்னை இறைவனாகக் கருதி பெருமை கொண்டிருந்தான்.

> **உண்மையை நேராகக் கூறினாலும், மரியாதையைக் கைவிடவில்லை. அன்போடு எச்சரித்தார்கள், பயமுறுத்தவில்லை. ஆனால் தந்தை கோபமானார்.**

இப்ராஹீம்(அலை) கூறினார்கள்: ‘என் இறைவன் வாழ்வையும், மரணத்தையும் அளிப்பவன்’. அதற்கு நம்ரூத் பதிலளித்தான். ‘நானும் வாழ்வையும், மரணத்தையும் அளிக்கிறேன்’ (அவன் ஒரு மரண தண்டனைக் கைதியை விடுவித்து ‘இவனுக்கு வாழ்வு கொடுத்தேன்’ என்றும், மற்றொருவரைக் கொன்று ‘இவனுக்கு மரணம் அளித்தேன்’ என்றும் வாதிட்டான்)

இப்ராஹீம்(அலை) கூறினார்கள்: ‘அல்லாஹ் சூரியனை கிழக்கிலிருந்து எழச் செய்கிறான்; நீ அதை மேற்கிலிருந்து எழச் செய்!’ இப்ராஹீம்(அலை) அவர்கள் எளிய, மறுக்க முடியாத ஆதாரம் கொடுத்தார்கள். இதற்கு நம்ரூத் பதில் சொல்ல முடியாமல் மௌனமானான்.

அறிவோடு பேசும் உண்மை, எந்த அகம்பாவத்தையும் வெல்லும். என்பதை அழகிய உரையாடல் மூலம் இப்ராஹீம் (அலை) அவர்கள் விளக்கினார்கள்.

சிறந்த உரையாடல் (Good Communication) மனித வாழ்க்கையிலும் சமூகத்திலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் உருவாக்கக்கூடிய சிறந்த அணுகுமுறையை முன்னெடுப்போம்.



ஆயிஷா சித்தீக்கா மகளிர்
இஸ்லாமியக் கல்லூரி
காயல்பட்டணம் - தூத்துக்குடி மாவட்டம்
பெண்களின் இஸ்லாமியக் கல்வித்திறன் மேம்பட 35 வருடத்திற்கும் மேலாக இயங்கி வருகிறது நமது கல்லூரி.
புதிய வருட சேர்க்கை ஆரம்பம் (2026 - 2027)
ஆலிமா, ஹிஃப்ழு & முபல்லிகா நேர்முகத் தேர்வு
2026 ஜூன் 3,4
புதன் மற்றும் வியாழன்
பாடங்கள்
( 3 வருட ஆலிமா படிப்பு)
1. அரபு மொழி.
2. குர்ஆன் தஜ்வீத்.
3. குர்ஆன் தஃப்ஸீர்.
4. அகீதா.
5. சீறா.
6. ஹதீஸ்.
7. ஃபிக்ஹ்.
8. வாரிசுரிமை சட்டங்கள்.
9. குர்ஆன் மணனம் ( 3 ஜுஸ்வு ).
பாட திட்டங்கள்
Religious and Academic Programs
3 வருட ஆலிமா படிப்பு
ஹிஃப்ளு - குர்ஆன் மனன பிரிவு
ஞாயிறு தோறும் தீனிய்யாத் வகுப்புகள்
அஃப்ஸலுல் உலமா பட்டப்படிப்பு
Degree & Education Programs
பட்டப்படிப்பு மற்றும் கல்வித் திட்டங்கள்
Distance Education
(தொலைதூரக் கல்வி
B.A | B.Com | BBA | M.A | M.Com
ஓராண்டு முபல்லிகா கல்வித்திட்டம்
Exclusively for Married Women
Skill Developing & Quran Studies
Practical Skill Training
(பயிற்சிகள்)
English Language
Computer Training
Tailoring Training
Global English
PC Computer
Tailoring
Word for word class
குர்ஆன் வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பு
HOSTEL
ஹிஃப்ழு சேர்வதற்கான விதிமுறைகள்
குர்ஆன் சரளமாக ஓத தெரிந்திருக்க வேண்டும்.
5 - ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும்.
உள்ளூர் மாணவிகள் 4-ம் வகுப்பு முடித்ததும் சேர்த்து கொள்ளப்படுவர்.
ஆலிமா சேர்வதற்கான விதிமுறைகள்
குர்ஆன் சரளமாக ஓத தெரிந்திருக்க வேண்டும்.
10 அல்லது 12-ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும்.
தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
முபல்லிகா சேர்வதற்கான விதிமுறைகள்
குர்ஆன் சரளமாக ஓத தெரிந்திருக்க வேண்டும்.
தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
(திருமணமான உள்ளூர் இல்லத்தரசிகளுக்கு மட்டும்)
சிறப்பம்சங்கள்
800+ ஆலிமா பட்டம் பெற்றுள்ளனர்
ஆலிமா பட்டம் பெற்ற மாணவிகள் மத்ரஸாக்கள், மக்தப்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களாகவும், முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றனர்.
+91 99946 36809
+91 90432 42198
குறிப்பு : நல்ல உணவு மற்றும் சுகாதாரமான / பாதுகாப்பான சூழலில் ஹாஸ்டல் வசதி உண்டு.

ஒரு நாடு வல்லரசாக வேண்டுமெனில் மனிதவள மேம்பாடு மிக முக்கியமானதாகும். அதில் கல்வியறிவே முதன்மையானதாகும். வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் கல்வி விகிதம் குறைவாக உள்ளது. 2026ஆம் ஆண்டிற்கான QS உலகப் பல்கலைக்கழக வரிசையில் இந்தியாவின் 54 உயர்கல்வி நிறுவனங்கள் முன்னேற்றம் அடைந்தாலும், உலகத் தரவரிசையில் முதல் 100 இடங்களில் இந்தியா இல்லை. ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் கல்விக்காக ஒதுக்கும் நிதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்று கல்வியாளர்கள் கோருகிறார்கள். இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் கல்வியின் முக்கியத்துவம் மிகத் தேவையானதாகும்.

நாட்டின் மக்கள் தொகையில் 65 விழுக்காட்டினர் 35 வயதிற்குட்பட்டவர்களாக இருப்பதால் இளைஞர்களுக்குத் தரமான கல்வி, திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். இந்தியாவின் கல்வி அமைப்பு உலகின் மூன்றாவது பெரிய அமைப்பாக உள்ளது. இதில் 6 முதல் 14 வயதுடைய குழந்தைகளில் 97 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் பள்ளிக்குச் செல்கின்றனர். இருப்பினும் தரம், சமத்துவத்தில் மிகப்பெரிய சவால்கள் உள்ளன. அரசியலமைப்பின் 86ஆவது திருத்தம் 21-அ பிரிவு இலவச தொடக்கக் கல்வியின் அறிமுகம், 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்வியை உறுதி செய்கிறது. 2010 ஏப்ரல் 1ஆம்தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி உரிமைச்சட்டம் ஒவ்வொரு குழந்தையையும், தரமான தொடக்கக் கல்வியைப் பெற வழி செய்கிறது.

புதிய கல்விக் கொள்கை(New Education Policy 2020) மூலம் பல புதிய திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தினாலும் அதனை எல்லா மாநிலங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதிலுள்ள பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி திருத்தங்களைக் கோருகிறார்கள். கிராமப்புற மாணவர்களில் அதிகமானோர் அரசுப் பள்ளிகளிலும், நகர்ப்புற மாணவர்களில் பெரும்பாலானோர் தனியார் பள்ளிகளிலும் பயில்கின்றனர். கிராமப்புறங்களில் கல்வியறிவு 73.5%



# கல்வி சவால்களும் சாதனைகளும்..!

- கப்ளிசேட்

ஆகவும், நகர்ப்புறங்களில் கல்வியறிவு 87.7% ஆகவும் உள்ளது. கிராமப்பகுதிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, பெண்கள் கல்வி அறிவில் பின்தங்கி இருப்பது பெரும் சவாலாக இருக்கிறது. பொருளாதாரம் உள்ளிட்ட பல் வேறு காரணிகளால் மாணவர்களின் இடை நிற்றல் விகிதம்(Drop outs) அதிகரித்துள்ளது.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களை உள்ளடக்கிய உயர்கல்வி முறை அரசு உயர் கல்வி நிறுவனங்கள், தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் என்று பரவலான வலை யமைப்பைக் கொண்டுள்ளது. கட்டண விகிதங்களில் அரசாங்க உயர்கல்வி நிறு வனங்களுக்கும், தனியார் உயர்கல்வி நிறு வனங்களுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. ஆசிரியர்களின் பற்றாக்குறை, காலாவதியான பாடத்திட்டம், போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை என உயர்கல்வி பல்வேறு சவால்களைச் சந்திக் கிறது. கல்விக்காக அரசுகள் ஒதுக்கும் நிதிகள் போதுமானதாக இல்லை. பல ஆசிரியர்களிடம் தரமான கல்வியைப் போதிப்பதற்கான திறன்களும், பயிற்சிகளும் இல்லை. ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் களையும், செயல் திறன்களையும் மேம் படுத்த விரிவான ஆசிரியர் பயிற்சித் திட்டங் களும், தொழில்முறை மேம்பாட்டுப் பயிற்சி முறைகளும் தேவைப்படுகின்றன.

தேசிய கல்விக் கொள்கை, டிஜிட்டல் இந்தியா திட்டம், இணையவழிக் கற்றல்கள், ஆன்லைன் பயிற்சிகள் என செயலி(Apps) தளங்களின் பெருக்கத்தால் கல்வியில் தொழில் நுட்பப் பயன்பாடும் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் வேலைவாய்ப்புப் பிரச்னைகளும் பெரும் சவாலாக உள்ளது. ஏராளமான பட்டதாரிகள் இருந்தாலும், வேலை சந்தைக்குத் தேவையான திறன்கள் அவர்களிடம் இல்லை. பல கல்வி நிலை யங்களிலுள்ள பாடத்திட்டங்கள், செய்முறை திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக் காததும் ஒரு காரணமாகும். இந்தப் பிரச் னையைத் தீர்ப்பதற்காக, தொழிற் கல்வி திறன் சார்ந்த பயிற்சிகள் மீதான நாட்டம் அண்மைக்காலமாக அதிகரித்து வரு கிறது.

திறன் இந்தியா திட்டம் போன்ற திட்டங் களை அரசு தொடங்கியுள்ளது. பல தனியார் குழுக்களும்(NGO) லாபநோக்கற்ற முறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடத்து கின்றன. கல்வியில் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. டிஜிட்டல் தளங்களையும், இணைய வெளிகளையும் பயன்படுத்துவதால் கிராமப் புறங்களுக்கும், நகர்ப் புறங்களுக்கும் இடையிலான இடை வெளியைக் குறைக்க உதவியதோடு மாண வர்கள் கல்வியை எளிதாக அணுகவும் வாய்ப் பாக அமைந்தது. கல்வியில் பாலின சமத் துவத்தை அதிகரிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளி னால் பெண்களின் சேர்க்கை விகிதம் கல்வி நிலையங்களில் அதிகரித்திருக்கிறது.

நாடு முழுவதும் மூடப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை குறித்து கேரளா வின் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப் பினர் ஜான்பிரிட்டஸ் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வி அமைச்சகம் எழுத்துப்பூர்வ மாக பதில் அளித்துள்ளது. அதில் கடந்த 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் 18,727 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டு இருப்பதாகவும், அதிலும் பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் அதிகமான பள்ளிகள் மூடப்பட்டு இருப் பதாகவும் தகவல் வெளியாகி அதிர்ச்சி அளித்துள்ளது. ஆனால் இதே காலகட்டத்தில் ஓராண்டில் 8475 தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இந்தியாவில் அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 2020-21 ஆண்டுகளில் 10,32,049 ஆக இருந்தது. அதுவே 2024-25 ஆண்டுகளில் 10,13,322 என்று குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 37 அரசுப்பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டும், 512 தனியார் பள்ளிகள் மூடப்பட்டும் இருப்பது பாராட்டுக்குரியது.

இந்தியாவில் இப்போது 1200 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இதில் 29% மாணவர்களே பயில்கின்றனர். இதில் மாணவர்கள் சேர்க்கை 50% ஆக உயரவேண்டும் எனில், பல்கலைக்

கழகங்களின் எண்ணிக்கை 2500ஆக உயர வேண்டும் என்று நிதிஆயோக் தெரிவித்துள்ளது. அரசு கல்வி நிலையங்கள் முதல் தனியார் கல்வி நிறுவனங்கள் வரை இன்று தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றன. Smart Class போன்ற முன்னெடுப்புகள் மாணவர்களின் செயல் திறனை அதிகரிக்கிறது. இன்றைக்கு பாரம்பரிய விரிவுரை கற்றலை விட மாணவர்கள் நேரடியாக Project என்ற செய்முறைப் பயிற்சி மூலமாகக் கற்பது பரவலாகி உள்ளது. இது மாணவர்களின் கற்கும் ஆற்றலையும், கற்பனைத் திறன்களையும், ஆர்வத்தையும் அதிகரித்து மாணவர்களின் திறன்களை மேம்படுத்துகிறது. இது வேலை வாய்ப்புகளில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்குகிறது.

இன்றைக்குக் கல்விக்கூடங்களில் தொழில்நுட்பம், கணினி அறிவு, தலைமைத்துவம், குழுப்பணி(Team work), வியூகச் சிந்தனை, தொடர் பயிற்சிகள் போன்ற புதிய பயிற்சி முறைகள், தொழில்நுட்பப் பயன்பாடுகள் மூலம் மாணவர்கள் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்கிறார்கள். கல்வியின் எதிர்காலம் செயற்கை நுண்ணறிவு(AI), டிஜிட்டல் தொழில்நுட்பம், தனிப் பயனாக்கப்பட்ட கல்விமுறைகளை உள்ளடக்கிய அமைப்பாக வேகமாக உருவாகி வருகிறது. இது மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக, விமர்சனச் சிந்தனை, பச்சாதாபம், வாழ்நாள் கற்றல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மூலம் செயற்கை நுண்ணறிவு(AI), மெய்நிகர் உண்மை(Virtual Reality), தரவு பகுப்பாய்தல்(Data science and Analysis) ஆகிய கற்றல் முறைகளை முற்றிலும் மாற்றி அமைத்துள்ளன. ஒவ்வொரு மாணவரின் வேகம், செயல்திறனுக்கு ஏற்ப, தனி பயனாக்கப்பட்ட கல்வித் திட்டங்கள், ஆன்லைன் செயலி தளங்கள் (Applications) கல்வியை எளிதாக அணுகக்கூடிய வகையில் மாற்றுகின்றன.



**ஏராளமான பட்டதாரிகள் இருந்தாலும் வேலைச் சந்தைக்குத் தேவையான திறன்கள் அவர்களிடம் இல்லை. பல கல்வி நிலையங்களிலுள்ள பாடத்திட்டங்கள், செய்முறை திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்காததும் ஒரு காரணமாகும்.**

கடந்த காலங்களில் கல்வி பெரும்பாலும் அனைவருக்கும் ஒரேமாதிரியான அணுகு முறையாக இருந்தது. ஆனால் எதிர்காலத்தில் நாம் தனிப் பயனாக்கப்பட்ட கற்றலை நோக்கி நகர்கிறோம். இதில் ஒவ்வொரு மாணவரின் திறன்கள், தேவைகள், கற்றல் திறனுக்கேற்ப பாடங்கள், உள்ளடக்கம் கற்றல் வேகம் ஆகியன கணக்கில் எடுக்கப்பட்டு போதனைமுறைகள் (Teaching methodology) செயல்படுத்தப்படுகின்றன. நவீன உலகம் வேகமாக மாறி வருகிறது. இன்று தேவைப்படும் திறன்கள் நாளை வழக்கொழிந்து போகலாம்.

இது பட்டம் பெறுவதை இலக்காகக் கொண்ட கற்றலில் இருந்து திறன் சார்ந்த கல்வி, வாழ்நாள் கற்றலுக்கான வழிகளை ஏற்படுத்துகிறது. மனிதவள மேம்பாட்டாளர்கள் மனிதவளங்களை அதிகரித்து, மேம்படுத்த பல தரவுகளையும், வழிகாட்டல்களையும் வழங்குகிறார்கள். மாணவர்களின் திறன்களை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும். முறையான பள்ளிக்கல்விக்கு அப்பாற்பட்ட கற்றலை அவர்கள் தொடர வேண்டும். நுண்கற்றல், படைப்பாற்றல், திறனாய்வுச் சிந்தனை போன்றவற்றில் மாணவர்களை பயிற்றுவிக்க வேண்டும். இந்த மாதிரிகளைப் பின்பற்றும் பள்ளிகள் மாணவர்களை தேர்வுக்கு மட்டும் பயன்படுத்தாமல் வாழ்க்கைக்குத் தயார்படுத்த வேண்டும். பெருந்தொற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட கலப்புக் கற்றல் முறையில் இணையவழி, நேரடி வகுப்புக் கற்றல் போன்ற முறைகள் இன்று மிகுந்த பயன் அளிக்கின்றன.

**கடந்த 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் 18,727 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டு இருப்பதாகவும், அதிலும் பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் அதிகமான பள்ளிகள் மூடப்பட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி அதிர்ச்சி அளித்துள்ளது.**



தனியார் கல்வி நிறுவனங்கள் மிகுந்த பொருட்செலவுடன் வழங்கும் கல்வியை சாதாரண ஏழை, எளிய கிராமப்புற மாண வர்களுக்கும் வழங்கும் சூழலையும், கற்றல் முறைகளையும் தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ளது. கற்றல் மேம் பாடு மூலம் 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு எண்ணறிவு, எழுத்தறிவை மேம் படுத்த முன்னெடுக்கிறது. வானவில் மன்றம் அமைப்பு மூலம் மாணவர்களி டையே அறிவியல், கணித ஆர்வம் தூண்டப் படுகிறது.

டிஜிட்டல் கற்றல் கருவிகளுடன் நவீன வகுப்பறைகளை உருவாக்குதல், ஆன் லைன், தொலைக்காட்சி வழியாக நவீன உள்ளடக்கங்களை உருவாக்குதல், உயர் தர கல்வி வசதிகளுடன் கூடிய மாதிரி பள்ளிகளை உருவாக்குதல்(Model school), முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மதிய உணவு திட்டங்கள், அரசுப் பள்ளி களில் படித்த மாணவிகளுக்கு உயர் கல் விக்காக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம், அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு உயர் கல்விக்காக மாதம் ரூபாய் 1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம், மாணவர்களின் திறனை மேம்படுத்தி வேலை வாய்ப்புகளை உரு வாக்கும் நான் முதல்வன் திட்டம், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகிய உயர் கல்வியில் சேர 7.5% இடஒதுக்கீடு, நவீன பாடத்திட்ட மாற்றங்கள் அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் அடிப்படை வசதி களை மேம்படுத்தி, நவீன ஆய்வகங்களை ஏற்படுத்தி, ஆராய்ச்சிகளை ஊக்குவித்து அறிவுசார் பொருளாதாரத்தை(Knowledge Economy) உருவாக்க தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025 மூலம் மாநிலத்தின் தனித் துவமான சிறப்பான திட்டமிடலை தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

மனப்பாடக் கல்விக்கு மாற்றாகச் சிந்திக் கும் திறனை ஊக்குவிக்கும் கல்வி முறை என அடிப்படைக் கல்வி முதல் மேல்நிலைப் பள்ளிக் கல்வி வரை பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியதின் மூலம் தமிழ்நாட்டில் கற்றல் விகிதம் தேசிய கற்றல் விகிதத்தை விடப் பலமடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

இன்றைக்கு வசதியான மாணவர்கள் பயில பல்வேறு கல்வி முறைகள் உள்ளன. MATRICULATION, CBSE, ICSE, ISC என்று பல்வேறு கல்வி முறைகளில் பல நவீன கற்றல் முறைகள் மூலம் கல்வி போதிக்கப்பட்டாலும் இது சாதாரண ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்களுக்குப் பெரும் சுமையாக இருக்கிறது. இதுபோன்ற தனியார் பள்ளிகள் சிறந்த உள்கட்டமைப்புகள், நவீன கற்றல் சாதனங்கள் எனப் பெரும் முதலீட்டைச் செய்வதால், அப்பள்ளிகளின் கட்டணங்கள் சாதாரண மக்களுக்குக் கட்டுப்படி யாகும் நிலையில் இருப்பதில்லை.

உயர்கல்வியிலும் தனியார் கல்லூரிகளின் கட்டண விகிதங்கள் மிக அதிகமாக இருக் கிறது. அரசு ஒதுக்கீடுகளில் அரசுக் கல்லூரி களில் இடம்பிடித்தால் மருத்துவம், பொறி யியல், வேளாண்மை, IIT, IIM போன்ற உயர் தரக் கல்வி நிறுவனங்களில் இடம் பிடித் தால், கல்விக் கட்டணங்கள் மிகக் குறைவாக இருப்பதுடன் வேலை வாய்ப்புகளிலும் முன்னுரிமை கிடைக்கிறது. மாணவர்கள் இதை அறிந்துகொண்டு அதற்கான மதிப் பெண்களைப் பெற முயற்சிக்க வேண்டும். தனிமனிதன், குடும்பம், ஊர், நாடு என்ற எல்லா இடங்களிலும் எதிர்கால அறிவுசார் சமூகத்தை (Knowledge Based Society) உரு வாக்க கல்வியறிவே அவசியம் என்று எல் லோரும் புரிந்து செயல்பட வேண்டும்.

بسم الله الرحمن الرحيم

# உஸ்வத்துன் ஹஸனா மாமாஞ்சி ஹாஜி அப்துல் லத்தீப் மகளிர் கல்லூரி

சுயநிதி
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)
தமிழக அரசு அங்கீகார எண் G.O. MS.No. 64590 / R2 / 2010 Dt 03.04.2012
பள்ளபட்டி – 639 205 கரூர் மாவட்டம்
போன் : 9443926460, 9150522701, 04320 – 241282
E.mail : uswathuhasanaclg@gmail.com நிர்வாகம் : பள்ளபட்டி முஸ்லிம் கல்விச் சங்கம்

## இளநிலைப் பட்டப்படிப்புகள்

**B.A. (English)**  **B.Com (CA)**  **B.Sc (CS)**

## கல்லூரியின் சிறப்பம்சங்கள்

- நவீன வசதிகளுடன், காற்றோட்டத்துடன் கூடிய விசாலமான வகுப்பறைகள்
- திறமை மிக்க பேராசிரியைகள் மூலம் தரமான கல்வி
- இன்டர்நெட் வசதியுடன் கூடிய கணினி ஆய்வகம்
- அரபி, ஆங்கிலம், தமிழ் நூல்கள் அடங்கிய நவீன நூலகம்
- அனைத்து மாணவிகளுக்கும் கணினி மற்றும் ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி
- பல்கலைக்கழகத் தேர்வுகளில் 100% தேர்ச்சி
- பல்கலைக்கழகத் தரவரிசைகளில் அதிக இடங்கள் பெற்று சாதனை
- அனைவருக்கும் ஏற்ற கல்விக் கட்டணம்
- உலகக் கல்வியோடு, முழுமையான தீனிய்யாத் பாடத்திட்டத்துடன் கூடிய மார்க்கக் கல்வியும் போதிக்கப்பட்டு கல்லூரிப் படிப்பை முடித்துச் செல்லும் போது மார்க்க அறிஞர் பட்டம் (Islamic Studies)
- தரமான உண்டுறை விடுதி

**விண்ணப்பப்படிவக் கட்டணம்**
**நேரில் ரூ.200/– தபாலில் பெற ரூ.225 /–**

தாளாளர்  முதல்வர்

# Unity Public School

( Affiliated to CBSE upto Class XII, Affiliation No: 1930241 )

**A Cradle for Good Etiquettes**

*A Great Opportunity for your beloved Children to learn both Islam and Formal Education*

**Our Vision**

*To Groom Children who will be Academically Intelligent*
*Morally Sound, Emotionally Strong, Physically Vibrant and God-Fearing.*

- CBSE Curriculum to take care of Academics
- Sports, Games and Taek Wondo to take care of Physical Education
- Values-Based Holistic Curriculum & vLead (Leadership/Personality Development) to take care of Character Education
- State-of-the-Art Labs & Activity Rooms
- Indoor and Outdoor Games Facility
- Air-Conditioned Auditoriums & Masjid






No. 109, Lakeview Rd, Kottur, Chennai-85 | Ph: 044-24451233, 24451244 | Email: unitypublic@unityschool.in

www.unitypublicschool.com



# தமிழகத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி இடைநிற்றல்:
## – ஓர் ஆய்வு

கல்வி என்பது ஒரு சமூகத்திற்கான மாபெரும் வெளிச்சம். அதைக் கொண்டே எந்த ஒரு சமூகமும் புத்துயிர் பெற முடியும். நாடு வளர்ச்சி அடைவதற்கு ஆண்களின் கல்வி அறிவு எந்த அளவிற்கு அவசியமோ அதேபோன்று பெண்களின் கல்வி அறிவும் மிக மிக அவசியம். ஆனாலும் தமிழ்நாட்டில் முஸ்லிம் பெண்களுக்கு அந்தக் கல்வி பாதியிலேயே முறிந்து விடுகிறது. பள்ளிக்கல்வியே முழுமை அடையாத நிலைதான் இன்றும் தமிழ்நாட்டில் குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள முஸ்லிம் பெண்களிடம் காணப்படு கிறது.

இந்தியாவில் கல்வி அறிவு பெற்ற மாநிலங்களில் சிறந்து விளங்கக் கூடியது தமிழ்நாடு. தமிழ்நாட்டில் கல்வியை சிறப்பிப்பதற்காகப் பல்வேறு திட்டங் களை அரசு அரை நூற்றாண்டுகளாகச் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக விலையில்லா மிதிவண்டி, மதிய உணவுத் திட்டம், விலையில்லா மடிக்கணினி, ஊக்கத்தொகைகள் போன்றவற்றினால் இதர மாநிலங்களை ஒப்பிடுகையில் கல்வி அறிவு பெற்றவர்களின் விழுக் காடு கணிசமாக உயர்ந்துள்ளது. இவ் வகையிலான வளர்ச்சியில் தமிழ்நாட்டு முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சி இன்றும் மிகப்பெரிய சவாலாகவே இருந்து வருகின்றது.

### ஆய்வுகள் சொல்வதென்ன?

தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளியில் இடைநிற்றல் சற்றேறக்குறைய ஏழு விழுக் காடாக உள்ளது. அதிகமான மாணவிகள் உயர் கல்வி நிலைக்குச் செல்வதற்கு முன்பே கல்வியை விட்டுவிலகி விடுகிறார்கள் என்று The New Indian Express(2024) கூறுகிறது. மற்ற சமூகங்களை விட இஸ்லாமிய மாணவிகள் கல்வியைத் தொடர்வது மிகக் குறைவாகவே உள்ளது எனவும் இடை நிற்றல் விகிதம் அதிகமாக உள்ளது எனவும் இந்திய அரசின் கல்விக்கான அதிகாரப் பூர்வ தளமாகச் செயல்படுகின்ற UDISE Plus (2020-21; 2021-22) தரவுகள் Education for All in India வின் ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

பொதுவாக முஸ்லிம் மாணவிகள் தொடக்கப்பள்ளி நிலையிலேயே அதிக சவால்களைச் சந்திக்கின்றனர். அதனாலேயே அவர்களின் இடைநிற்றல் அதிகரிக்கின்றது. ‘முஸ்லிம்களே இந்தியாவில் உயர் கல்வியில் மிகக்குறைவான சேர்க்கை



**- ஷா.காதர் கனி,**
முதல்வர், கிரசண்ட்
உயர்நிலைப்பள்ளி,
பார்த்திபனூர்

விழுக்காட்டில் உள்ளனர்' என்று Scroll.in (2016) அறிக்கை கூறுகிறது. இந்த ஆய்வுகளும் தரவுகளும் பள்ளிக் கல்வியில் இஸ்லாமிய மாணவியர்களின் இடைநிற்றல் அதிகமாக இருப்பதை முன்வைக்கின்றன.

## ஆய்வுகள் சொல்வதென்ன?

கல்வியில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டில் மற்ற சமூகங்களுடன் ஒப்பிடுகையில் இஸ்லாமியர்களுக்குச் சமமான முன்னேற்றம் உள்ளதா என்பதில் கேள்வி உண்டு. சச்சார் கமிட்டியின் பரிந்துரைகள் இஸ்லாமியக் கல்வி நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டின. 2018ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட ஆய்வின் முடிவு 'குடும்ப வறுமை, பெற்றோர் கல்வியறிவு இல்லாமை, கட்டுப்பாடுகள் போன்றவற்றால் சிறுபான்மையின மக்கள் இடைநிற்றலை எதிர்கொள்கின்றனர்' என்று கூறுகிறது.

முஸ்லிம் மாணவிகள் இடைநிற்றலுக்கு கலாச்சாரம், பொருளாதாரம், கட்டுப்பாடுகள், குடும்பச் சூழல் மட்டுமின்றி பாதுகாப்பு, பொருளாதார அழுத்தம், முன்கூட்டியே திருமணம் போன்ற பல காரணங்களும் உள்ளன என Express News Service (2024) கூறுகிறது.

## விலகலுக்கான அடிப்படைக் காரணிகள்

- பல குடும்பங்களில் தந்தை வெளிநாட்டில் இருப்பதால் மகளின் கல்விக்கான கண்காணிப்பு குறைகிறது.
- தாயிடம் போதிய கல்வி அறிவு இல்லாததினால் மகளுக்கான கல்விக்கு வழிகாட்ட முடிவதில்லை.
- குடும்பத்தில் உள்ள ஆண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் பெண் குழந்தைகளின் கல்வி கேள்விக்குறியாக்கப்படுகின்றன.
- பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்கள் குறைவான வருமானத்தில் வாழ்கின்றனர்.

**இஸ்லாமிய சமூக அமைப்புகளும் முஹல்லாக்களும் பெண் குழந்தைகளுக்கான கல்வி விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். முஹல்லாக்கள் தோறும் கல்வியாளர்களுடன் சேர்ந்து செய்ய வேண்டிய சில அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.**

- கல்வியை விட குடும்ப பாரம்பரியத் திற்கும் மரியாதைக்கும் அதிக முக்கியத் துவம் கொடுப்பது.
- இளம் வயதிலேயே திருமணம் செய்வது, பாதுகாப்பு குறித்த அச்சம்.
- பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வசிக் கும் கிராமங்களில் மேல்நிலைப் பள்ளி களின் குறைவான எண்ணிக்கை.
- பெண் ஆசிரியர்களின் குறைவான எண் ணிக்கை.
- இடைநிற்றலைக் கண்காணிக்கும் முறை மைகளில் உள்ள பலவீனம்.

## விளைவுகள்

ஒரு முஸ்லிம் மாணவிக்கு உயர்நிலைக் கல்வி தடைபடும் போது கல்வியின் மூலம் கிடைக்கக்கூடிய அறிவும், தெளிவும் பொருளாதார முன்னேற்றமும் குறை கிறது. திருமணத்தையும் முன்கூட்டியே திட்டமிடக்கூடிய நிலையும் ஏற்படுகின் றது. சிறுபான்மையின மனித வளத்தை இஸ்லாமிய சமுதாயமும் நாடும் இழக்க நேரிடுகிறது.

## தீர்வை நோக்கி..

இஸ்லாமிய சமூக அமைப்புகளும் முஹல்லாக்களும் பெண் குழந்தைகளுக் கான கல்வி விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். முஹல்லாக்கள் தோறும் கல்வி யாளர்களுடன் சேர்ந்து செய்ய வேண்டிய சில அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- UDISE+ தரவின் அடிப்படையில் முன்னெச் சரிக்கைத் தீர்வுகளை நோக்கி திட்டமிட வேண்டும்.
- குடும்பங்கள் பெற்றோருக்குத் தேவை யான ஆலோசனைகளையும் விழிப்பு உணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டும்.
- முஸ்லிம் மாணவிகள் XI - XII வகுப்பு களை நிறைவு செய்வதற்கான உதவித் தொகைகள் கிடைப்பதை மஹல்லா நிர்வாகிகள் உறுதி செய்ய வேண்டும்.
- பாதுகாப்பான விடுதிகள், பெண் ஆசிரி யைகள், சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும். அத்துடன் உயர் கல்வி பெறுவதற்கு பாதுகாப்பான போக்கு வரத்து வசதிகளையும் உறுதி செய்ய வேண்டும்.
- கல்வியினால் முன்னேறிய முன்னோடி முஸ்லிம் பெண்களை வழிகாட்டுதலுக்கு உட்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் முஸ்லிம் பெண்களின் இடைநிற்றல் வெறும் கல்வி சார்ந்த விஷயம் மட்டுமல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பொதுச் சமூகத்தின் அங்கத்தின ராக வாழக்கூடிய நம் சமூகப் பெண்களின் கல்வி நிலை உயர்ந்தாலொழிய சமூக முன்னேற்றம் ஏற்படாது.


# மணமகன் தேவை

**வயது** : 25
**உயரம்** : 5.3
**படிப்பு** : Bachelor of Human Science (IIUM University Malaysia)

**மார்க்கப் பற்றுள்ள தொழுகையாளி யான நல்ல அழகும் குணமும் உள்ள ஓமானில் வசிக்கும் தமிழ் முஸ்லிம் மணமகளுக்கு நன்கு படித்த மார்க்கப் பற்றுள்ள வெளிநாட்டில் பொறியாளர் அல்லது மருத்துவர் பணியில் உள்ள மணமகன் தேவை!**

**WhatsApp: +919865648596**
**email: aashussain1967@gmail.com**

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

கல்வியைத் தேடி ஒருவர் ஒரு வழியில் சென்றால், அதற்காக அவருக்கு சொர்க்கத்தின் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான்.

– முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35, கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611

# ஆழ் தொழில்நுட்பத்தில்(Deep Tech) புதுத் தொழில்(Startup) தொடங்க என்ன படிக்க வேண்டும்?

– வாஜித் ஷா (கல்வியாளர்)

அண்மையில் ஜாவா கற்று சிறப்பாக வேலை செய்து வந்த ஒருவர் ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸில்(AI) அதிகமாகத் தெரியாததால் IT பணியை இழந்து விட்டேன். அடுத்து என்ன செய்வது? என்று ஆலோசனை கேட்டார். வேலைக்குப் போகலாமா அல்லது சுயவேலை(ஸ்டார்ட்அப்) செய்யலாமா? எனக் கேட்டார். இரண்டில் எதைத் தேர்வு செய்தாலும் மேலும் கற்க வேண்டும் என்றேன்.

'என்ன கற்க வேண்டும்?' என்று வினவினார். நிரந்தர வேலையின் காலம் குறைந்து, ஸ்டார்ட்அப் அதிகமாகும் காலத்தில் நாம் இருக்கிறோம். ஸ்டார்ட்அப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தொழில் நுட்பத்தையும் வணிகவியலையும் கற்க வேண்டும் என்று கூறினேன். முதலில் வேலை, சுய தொழில் குறித்த சில தகவல்களைக் கவனிப்போம்.

### ஸ்டார்அப்பிற்காக என்ன படிக்க வேண்டும்?

இந்தியாவின் வேலையின்மை 2025இல் 3.1 விழுக்காடாகும். மதரீதியாகக் கவனித்தால் சீக்கியர்களிடமும் முஸ்லிம்களிடமும் வேலையின்மை அதிகமாகியுள்ளது. இந்துக்களிடம் வேலையின்மை குறைந்துள்ளது. கிறித்தவர்களிடம் ஏற்ற இறக்கம் காணப்படுவதாக பிரியாடிக் லேசர் சர்வே தெரிவிக்கிறது. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள்.

| | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|
| இந்துக்கள் | 3.6 | 3.1 | 3.1 | 3.0 |
| முஸ்லிம்கள் | 2.9 | 2.9 | 33.3 | 2.3 |
| கிறித்தவர்கள் | 5.2 | 4.5 | 5.3 | 3.6 |
| சீக்கியர்கள் | 5.6 | 5.9 | 5.1 | 5.1 |
| அனைவரும் | 3.6 | 3.1 | 3.2 | 3.1 |

இந்த அட்டவணையின் மூலம் முஸ்லிம்கள் குறைந்த அளவில் பணியில் இருப்பதை அறியலாம்.

மேலும் ஒரு தகவலை கவனியுங்கள்.

| | வணிகம் | நிரந்தரம் | தற்காலிகம் |
|---|---|---|---|
| இந்துக்கள் | 58.3 | 21.9 | 19.8 |
| முஸ்லிம்கள் | 62.3 | 18.0 | 19.7 |
| கிறித்தவர்கள் | 53.2 | 27.6 | 19.2 |
| சீக்கியர்கள் | 51.1 | 26.7 | 22.2 |
| அனைவரும் | 58.5 | 21.7 | 19.8 |

சுயமாகத் தொழில் செய்வது என்றால் ஸ்டார்ட்அப் என்றாகிவிட்டது. புதுமையான யோசனைகள், தனித்துவமான தயாரிப்புகள் அல்லது சேவைகளை வழங்கி மிக வேகமாக வளரும் முயற்சியை ஸ்டார்ட்அப் என்கிறோம். சாதரண வணிகத்தில் பழைய பிரச்னைகளுக்குப் பாரம்பரிய அணுகுமுறை இருக்கும். ஆனால் ஸ்டார்ட்அப்பில் அதே செயலை வித்தியாசமாகச் செய்ய வேண்டும்.

அட்வான்ஸ் சாட்டிலைட் கம்யூனிகேஷன், மருத்துவத் துறையில் நோயைக் கண்டறிதல், டர்பைன் இன்ஜீனியரிங், அட்வான்ஸ் மெட்டீரியல்ஸ், ரோபடிக், கம்ப்யுடேஷனல் பயாலேஜி, காலநிலை தொழில் நுட்பம், அட்வான்ஸ் ஹார்டுவேர் எனப் பலவகையான ஸ்டார்ட்அப்கள் உருவாகியுள்ளன. நுகர்வோர் பொருட்கள் என்றால் மதிப்பு எவ்வுளவு கூடியுள்ளது என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். ஆனால் ஆழமான தொழில் நுட்பம் உள்ள ஸ்டார்ட்அப்களில் காப்புரிமை, அரசின் கன்ராக்ட்கள், வருவாய் போன்றவை முக்கியமானவை எனக் கருதப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஈரான் அமெரிக்கா இஸ்ரேல் போருக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள், கிழக்காசியாவை நோக்கி வெளிநாட்டுக் கல்வி நகர்ந்துள்ளது. வெளிநாடு செல்வது சுமார் 15 முதல் 20 விழுக்காடு வரை குறைந்துள்ளது. இதனால் செலவுகள் சுமார் 25 விழுக்காடு அதிகரித்துள்ளது.



பாதுகாப்புத் துறைக்கான தேவைகள் அதிகரித்துள்ள போதிலும் சிவிலியன்களின் தேவைகளும் முக்கியத்துவம் அடைந்துள்ளன. எனவே இருவகைத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆழ் தொழில்நுட்ப ஸ்டார்ட் அப்பைத் தொடங்குவது சிறந்தது.

ஆழ் தொழில் நுட்ப ஸ்டார்ட்அப்பிற்கு என்ன கல்வி தேவை என்பதை ஆய்வு செய்யும் போது முதலில் தோன்றுவது IIT, IIM தான். பிறகு பெங்களூரில் உள்ள இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஆஃப் சயின்ஸ் போன்ற நிறுவனங்களிலும் நடைமுறைக்குத் தேவையான கல்வி கற்க முடியும்.

வெளிநாடு செல்வது என்றால் ஸன்ஸி பாரில் சென்னை IITயின் சர்வதேச கேம்பஸில் தகவல்களைச் சக்தியாக்கும் டேட்டா சயின்ஸ் கற்கலாம். ஈரான் அமெரிக்கா இஸ்ரேல் போருக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள், கிழக்காசியாவை நோக்கி வெளிநாட்டுக் கல்வி நகர்ந்துள்ளது. வெளிநாடு செல்வது சுமார் 15 முதல் 20 விழுக்காடு வரை குறைந்துள்ளது. இதனால் செலவுகள் சுமார் 25 விழுக்காடு அதிகரித்துள்ளது. ஜெர்மனி, அயர்லாந்தில் செலவுகள் குறைவாக உள்ளதால் இவை முக்கிய மாற்றாக உள்ளன.

கல்விக்காக UAEவில் ஆண்டுக்கு 15,000 முதல் 25,000 டாலர் வரை தேவைப்படுகிறது. ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் ஆண்டிற்கு 25,000 டாலர் செலவாகிறது. UKவில் ஆண்டிற்கு 30,000 டாலர்களும் ஆஸ்திரேலியாவில் ஆண்டிற்கு 45,000 டாலர்களும் செலவாகிறது. வெளிநாடு, இந்தியாவில் தொழில் நுட்பம், வணிகக் கல்வி கற்று வேலைக்குச் செல்வதை விட ஸ்டார்ட் அப்பில் ஈடுபடலாம். அதிலும் ஆழமான தொழில்நுட்ப அறிவாற்றலை மையமாகக் கொண்ட கல்வி என்கிற கருத்து வலுவடைந்துள்ளது. எனவே தொழில்நுட்பம், வணிகவியலைக் கற்பது சிறந்ததாகும்.

கூடுதல் விவரங்களுக்கு : 98842 27669


## மணமகன் தேவை

**வயது** : 40 **உயரம்** : 5.3 **படிப்பு** : M.Com., M.Phil.,

மார்க்கப் பற்றுள்ள தொழுகையாளியான நல்ல அழகும் குணமும் உள்ள தமிழ் முஸ்லிம் மணமகளுக்கு முதல் திருமணம் செய்ய நன்கு படித்த மார்க்கப் பற்றுள்ள அரசுப் பணி, பள்ளி - கல்லூரிப் பணி அல்லது வெளிநாட்டில் பொறியாளர் அல்லது மருத்துவர் பணியில் அல்லது உள்ளூரில் சுயதொழில் செய்யும் மணமகன் தேவை!

• WhatsApp: +919865648596 • email: esemem78@gmail.com

# உங்களுக்கான வேத நூல் இது!

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

**‘உங்களுக்கு நிச்சயமாக ஒரு வேதநூலை இறக்கி (அருளி)யிருக்கின்றோம். அதில் உங்களுடைய ‘திர்க்’ இருக்கிறது. நீங்கள் அறிந்து கொள்ள மாட்டீர்களா? (திருக்குர்ஆன் 21:10)**

நாம் மீண்டும் மீண்டும் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஓர் அற்புதமான திருக்குர்ஆன் வசனம் இது. இந்த வசனம் என்னையும் உங்களையும் நம் அனைவரையும் முழு மனித குலத்தையும் விளித்துப் பேசுகிறது: ‘உங்களுக்கு நிச்சயமாக நாம் ஒரு வேத நூலை இறக்கி(அருளி)யிருக்கின்றோம்’

திருக்குர்ஆன் இறக்கியருளப்பட்டது தொடர்பான வசனங்கள் பெரும்பாலும் ஒருமையில் பேசுவதையும், அது நபியவர்களைக் குறிப்பதையும் காணலாம். ஆனால் இந்த வசனம் நபியவர்களை மட்டும் அல்லாமல், நம் அனைவரையும் நோக்கிப் பேசுகிறது. அதனால் தான் இது பன்மை வடிவில் அமைந்திருக்கின்றது.

‘உங்களுக்கு (அதாவது, உங்கள் அனைவருக்கும்) நிச்சயமாக நாம் ஒரு வேத நூலை இறக்கி (அருளி)யிருக்கின்றோம்’

இப்படிச் சொல்லிவிட்டு திருக்குர்ஆன் நம் அனைவருக்கும் என்னதான் சொல்கின்றது? அது சொல்லுகின்ற செய்தி இதோ!




‘இதில் உங்களுடைய ‘திக்ர்’ இருக்கிறது’ என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது. ‘திக்ர்’ என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உள்ளன. அவையாவன:

### 1. பிரஸ்தாபம் (Mention)

இந்தக் குர்ஆனில் உங்களைப் பற்றிய பிரஸ்தாபம் உள்ளது. நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? எங்கு செல்லப் போகிறீர்கள்? இந்த இடைப்பட்ட வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், சிக்கல்கள் யாவை? அவற்றுக்கான தீர்வுகள் என்ன? இவை எல்லாவற்றையும் இது விளக்குகிறது; நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்றுத் தருகிறது.

இது உங்களது வேத நூல்! உங்களுக்கான வழிகாட்டி! இதனை விட்டுவிட்டு, நீங்கள் எங்கு சென்று எதைப் பெற

> **இதில்தான் உங்கள் கௌரவமும் உயர்வும் உள்ளது; இது உங்களுக்கான நினைவூட்டல். இவற்றையெல்லாம் புரிந்து நீங்கள் இதன் பக்கம் திரும்ப மாட்டீர்களா? இதன் வழிகாட்டல்களின் அடிப்படையில் உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முன்வர மாட்டீர்களா?**

முடியும்? இதுவே இந்த வசனம் நமக்குச் சொல்ல வரும் செய்தியாகும்.

### 2. உயர்வு, கண்ணியம் (Honor)

'திக்ர்' என்பது கௌரவம், கண்ணியம், உயர்வு என்பதையும் குறிக்கிறது. அதாவது உங்களின் உண்மையான மதிப்பும் உயர்வும் இந்தக் குர்ஆனில்தான் உள்ளது; இதனை ஏற்றுக்கொண்டு இதன் போதனைகளைப் பின்பற்றுவதில்தான் உள்ளது என்பதும் இந்த வசனத்திற்கூடாக உணர்த்தப்படுகின்றது.

### 3. நினைவூட்டல் (Reminder)

'திக்ர்' என்பது நினைவூட்டல் என்ற பொருளையும் தருகின்றது. திருக்குர்ஆன் நமக்கு உண்மையான நினைவூட்டியாக உள்ளது. வாழ்க்கையின் நோக்கம், உலக வாழ்க்கையின் யதார்த்தம், நிலையான மறுமை வாழ்வு, நமக்கு முன்னால் உள்ள கடமைகள் - இவை அனைத்தையும் இந்தக் குர்ஆன் நமக்குத் தொடர்ந்து நினைவூட்டுகிறது என்ற வகையிலும் இது நமக்கான 'திக்ர்' ஆக விளங்குகின்றது என்றும் கொள்ளலாம்.

திக்ர் என்ற பிரயோகம் மூன்று முக்கியக் கருத்துகளைத் தருகின்றது:

- உங்களைப் பற்றிய பிரஸ்தாபம்
- உங்கள் கௌரவம், உயர்வு
- உங்களுக்கான நினைவூட்டல்

இறுதியாக இந்த வசனம் இது தொடர்பாக நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது: 'நீங்கள் (சிந்தித்து, இந்த உண்மையைப்) புரிந்து கொள்ள மாட்டீர்களா?'

இதில் உங்களைப் பற்றிய உண்மை உள்ளது; செய்திகள் உள்ளன; இதில்தான் உங்கள் கௌரவமும் உயர்வும் உள்ளது; இது உங்களுக்கான நினைவூட்டல். இவற்றையெல்லாம் புரிந்து நீங்கள் இதன் பக்கம் திரும்ப மாட்டீர்களா? இதன் வழிகாட்டல்களின் அடிப்படையில் உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முன்வர மாட்டீர்களா?

இதுவே இந்த திருக்குர்ஆன் வசனம் நம் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளும் செய்தி!


**ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!**

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# சமரசம் புதிர் போட்டி 10

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 மே 31 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. வானங்கள், பூமியின் ஆட்சி அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது என்பதையும் அவனைத் தவிர வேறு எந்தப் பாதுகாவலனும் உதவியாளனும் உங்களுக்கு இல்லை என்பதையும் நீங்கள் அறியவில்லையா?’ என்ற வசனம் இடம்பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் முல்க் ஆ) அல் பகரா

2. ‘ஆதமின் மகனுக்கு இரண்டு பள்ளத்தாக்குகள் நிறைய செல்வம் இருந்தாலும் மூன்றாவதாக இன்னொரு பள்ளத்தாக்கு நிறைய செல்வம் வேண்டும் என்றே அவன் ஆசைப்படுவான். ஆதமின் மகனுடைய வயிற்றை மண்ணால் மட்டுமே நிரப்ப முடியும்’ – இந்த நபிமொழியின் அறிவிப்பாளர் யார்?

   அ) அபூஹுரைரா(ரலி)
   ஆ) இப்னு அப்பாஸ்(ரலி)

3. பெண்களை நபி(ஸல்) அவர்கள் எதைப் போன்றவர்கள் என்று ஒப்பிட்டார்கள்?

   அ) கண்ணாடிக் குடுவை ஆ) நிலா

4. நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை

   அ) 10 ஆ) 9

5. நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியவர்

   அ) கே.பி.முனுசாமி
   ஆ) கே.ஆர். பெரிய கருப்பன்

6. பாவை விளக்கு நாவலை எழுதியவர்

   அ) அகிலன் ஆ) கல்கி

7. வெனிஸ் திரைப்பட விழாவில் சில்வர் லயன் கிராண்ட் ஜூரி விருதைப் பெற்ற ஃபலஸ்தீனர்களின் வலிகளைப் பேசிய திரைப்படம்

   அ) தி வாய்ஸ் ஆஃப் ரஜப் ஹிந்த்
   ஆ) ஃபர்ஹா

8. நில நடுக்கங்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் கருவி

   அ) ரிக்டர் ஆ) செய்ஸ்மோகிராப்

## புதிர் போட்டி எட்டுக்கான விடைகள்

1.(ஆ)அல்ஹஜ் 2.(அ) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி) 3.(அ) புறம் பேசுதல் 4.(அ) பூமியில் குழப்பம் விளைவித்தல் 5.(ஆ) சையத் முஹம்மத் நகீப் அல் அத்தாஸ் 6.(ஆ) ஸ்டாக்ஹோம் 7.(அ) முசாதிக் 8. (ஆ) முஹம்மத் அல் குதாரி 9. (அ) அப்பாஸ் அராக்சி 10. (ஆ) திருப்பரங்குன்றம் FILES

## சரியான விடையை எழுதியவர்கள்:

1.ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 2. முஹம்மது உவைஸ், ஏர்வாடி 3. P.A. சமீஹா, கடையநல்லூர் 4.சாஜியா ஷர்புத்தீன், காட்டான்குளத்தூர் 5. ந.அனிபா, நாமக்கல் 6. அஹமது நிஷா, அனகாபுத்தூர் 7. அ.பல்கீஸ் அஷ்ரப்தீன், பண்டாரவாடை 8. S.S. ஆயிஷா பானு, கடையநல்லூர்

## பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

முஹம்மது உவைஸ், ஏர்வாடி

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது.
உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

TRUST WORTHY

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
**சென்னை 044-28594441 / 2 / 3**
**95516 622 31**
**91 98410 786 36**

# இன்னும் ஒரு ரியல் ஹீரோ


ரம்ஜான்

2026 ஏப்ரல் 30ஆம் நாள் மத்தியப்பிரதேச மாநிலம் ஜபல்பூரின் பர்கி அணைக்கு அருகில் உள்ள நர்மதா ஆற்றில் மத்தியப் பிரதேச சுற்றுலாத்துறைக்குச்(MPT) சொந்தமான படகு கவிழ்ந்து 11 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங் களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் மீட்கப்பட்டவர்கள் நலம் பெறப் பிரார்த்திக் கின்றோம்.

இந்திய ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை(NDRF), மத்தியப் பிரதேச மாநில பேரிடர் அவசர கால மீட்புப் படை (SDERF), உள்ளூர் மீனவர்கள் உட்பட 200 வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு 28 பயணிகளை மீட்டுள்ளனர். இந்தப் படகுப் பயணத்தில் பயணிகளுக்கான பாது காப்புக் கவசமான லைஃப் ஜாக்கெட் வழங்கப்படவில்லை. போதிய பாதுகாப்புகள் மேற்கொள் ளப்படவில்லை.

படகு மூழ்கும் போதுதான் லைஃப் ஜாக்கெட் கொடுக்கத் தொடங்கியதாக செய்திகள் வெளியான சூழலில் படகு சவாரிக்கான திருத்தப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) அரசு தயாரிக்கும் என்று சுற்றுலாத்துறைச் செயலாளர் டி. இளையராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இதுபோன்ற கவனக்குறைவால் பல விபத்துகள் நேரிட்ட போதும் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தப்படாதது அரசின் மெத்தனப் போக்கையே காட்டு கிறது.

மீட்புப் பணியினர் வருவதற்கு முன்பே இந்த விபத்து நிகழ்ந்த உடனேயே தன்னுடைய உயிரைக் கூடப் பொருட்படுத்தாமல் துணிந்து தீரத்துடன் 25 அடி உயரத்திலிருந்து தண்ணீருக்குள் பாய்ந்து நான்கு உயிர்களைக் காப்பாற்றி இருக்கின்றார் ரம்ஜான் என்கிற இளைஞர். இந்த வீரச் செயலுக்காக ரம்ஜானுக்கும், அவருடன் உதவிய தொழிலாளர்களுக்கும் மத்தியப் பிரதேச அரசு ₹51,000 ரொக்கப் பரிசு அறிவித்துள்ளது.

முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்திரித்து ஊடகங்கள் திட்டமிட்டு தொடர்ந்து பரப்பிவரும் பொய்ச் செய்திகளுக்கிடையே பேரிடர் காலங்களில் உயிர் காக்கும் அரும்பணியை முஸ்லிம்கள் செய்து வருவதும் தொடர்கிறது. உயிர்காக்கும் உயர் பணி செய்யும் முஸ்லிம்களின் உண்மையான சித்திரத்தில் அழுத்தமாகத் தடம் பதித்துள்ளார் ரம்ஜான். வாழ்த்துகள் ரம்ஜான்.

**- அமீரா முர்ஷிதா**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 31 MAY 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

*With Best Compliments from:*






# Rahmath Girls' Matric Hr Sec School

PKT Road, Muthupet-614 704. Thiruvarur District, Tamilnadu

**Cell : 82203 02588**